நகர சபை, யாழ்ப்பாணம்

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

எப்பொழுதும் உங்கள் பயணத்தில் அன்பாக

SPICE TRAVELS & TOURS (PVT) LTD

IATA

(C/432)

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு - 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 | தை 26 | புதன்கிழமை | (09.02.2011) | பக்கங்கள் 12 | ஓசை - 132

## பொதுநலவாய நாடாளுமன்றக்குழுவின் பிராந்திய மாநாடு கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

பொதுநலவாய நாடாளுமன்றக் குழுவின் ஆசியப் பிராந்திய மாநாடு நாளை கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது. 10ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 16ஆம் திகதி வரை கொழும்பு ஹில்ரன் ஹொட்டலில் நடைபெறவுள்ள இம் மாநாடடினை பிரதமர் டி.எம்.ஜெயரட்ன ஆரம்பித்து வைக்கவுள்ளதாக தெரியவருகிறது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த தேசிய மற்றும் மாகாண நாடாளுமன்றங்களின் சபாநாயகர்கள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இம் மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர். பங்குபற்றும் பிரதிநிதிகள் இப்பிராந்தியத்தில் பொதுவாகப் பாதிப்பினை விளைவிக்கும் வறுமை ஒழிப்பு, பருவகால மாற்றங்கள் மற்றும் தாய், சேய் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாநாட்டில் பங்குபற்றும் விருந்தினர்கள் இலங்கையின் கண்டி மற்றும் சிகிரியா உள்ளிட்ட முக்கிய (11 ஆம் பக்கம் பார்க்க)



இது போருக்கு புறப்படும் விமானம் அல்ல. பயணிகளின் சேவைக்காம்...

# கறைபடியாத கரங்கள் என்றால் உயர்த்துங்கள்



## நாடாளுமன்றில் அமைச்சர் டக்ளஸ் பேச்சு

(கொழும்பு)

**உங்களது கரங்கள் கறைபடியாதவைகள் என்றால் அவைகளை உயர்த்துங்கள் பார்க்கலாம் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நாடாளுமன்றத்தில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நோக்கி நேற்றைய தினம் ஆக்ரோசமாக கேட்டுக்கொண்டார். நாடாளுமன்றில் நடைபெற்ற அவசரகால சட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,** (11 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.வின் உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கும்

(கொழும்பு)

பாதிப்படைந்த இலங்கை மக்களுக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி நீல் புஹுனே இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையில் (11 ஆம் பக்கம் பார்க்க)

## குளத்திலிருந்து சடலம் மீட்பு

(சுழிபுரம்)

சுழிபுரம் மேற்கில் உள்ள குளம் ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருக்கிறது. பாண்டவெட்டை என்னும் இடத்தைச்சேர்ந்த முருகேசு சிவநேசன் (வயது-28) என்பவரின் சடலமே நேற்று மாலை மேற்படி குளத்திலிருந்து (11 ஆம் பக்கம் பார்க்க)

## கனமழை குறையும் குளிர்காற்று வீசும்

(கொழும்பு)

நாடெங்கிலும் கடந்த தினங்களில் பெய்து வருகின்ற கடுமையான மழைவீழ்சி, எதிர்வரும் நாட்களில் குறைவடையலாம் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினத்தை விட குறைந்த அளவிலான மழை வீழ்சியே நேற்றையதினம் பதிவாகியதாக வானிலை அவதான நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.எவ்வாறாயினும் இலங்கைக்கு மேற்பரப்பில் சூழ்ந்துள்ள 'லா நின்யா' முகில் கூட்டம் எதிர்வரும் மே மாதம் வரையில் இலங்கையைச் சூழ்ந்திருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக தற்போது காணப்படுகின்ற குளிர்ச்சியான காலநிலை தொடர்ந்தும் நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நடமாடும் நூலக சேவை மீண்டும் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடத்திற்கான யாழ். நூலகத்தின் பாடசாலைகளுக்கான நடமாடும் நூலகசேவை நேற்றையதினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். நூல்நிலைய பிரதான நூலகர் தெரிவித்தார்.

நேற்றையதினம் கைதடி (11 ஆம் பக்கம் பார்க்க)

## அவரசகாலச்சட்டம் மேலும் நீடிப்பு

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்றைய தினம் மீண்டும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

அவசர கால்ச்சட்டம் தொடர்பான விவாதத்தையும், வாக்கெடுப்பையும் நேற்று நடத்துவதற்கு, கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் (11 ஆம் பக்கம் பார்க்க)

# இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் வேண்டும் இல்லையேல் வன்முறை மீண்டும் முளைவிடும்

## இது அமெரிக்காவின் இராஜதந்திரக் கணிப்பு



(வோஷிங்டன்)

இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசு உரிய முயற்சிகளை எடுக்கவேண்டும் என்றும் இவ்வாறான எந்த முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளத்தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் இலங்கைத் தீவில் மீண்டும் வன்முறைப் போக்குகள் தலைதூக்கும் வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்கு ஒப்பானதாக அமைந்து விடும் என்று அமெரிக்கா கருதுகிறது.

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் Teresita Schaffer இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள சென்னை மாநகரத்தில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு 'தெற் காசியப் பிராந்தியத்தின் பாதுகாப்பு மீதான அமெரிக்கப்பார்வை' என்னும் பொருளில் (11ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் தென்னைச் செய்கை ஊக்குவிப்பு; உர மானியம் வழங்குவதற்கு ஏற்பாடு

(தொல்புரம்)

தென்னைச் செய்கையில் ஈடுபடும் தெங்கு உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் உரம் விநியோகிக்கப்படவுள்ளது. அண்மையில் தேங்காய்க்கு நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து தென்னை உற்பத்தியினை அதிகரிப்பதற்கு அரசு துரித நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

இதன்படி கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மானிய விலையில் உரம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் முதற்கட்ட நடவடிக்கையாக தெங்கு உற்பத்தியில் ஈடுபடுவோர் தொடர்பான தகவல்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாகத் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

தெரிவு செய்யப்படும் தெங்கு உற்பத்தியாளர்களுக்கு ஆயிரம் ரூபா மானிய விலையில் உரம் விரைவில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (26)

# குற்றச் செயல்களைத் தடுக்கவே படையினரின் பதிவு நடவடிக்கை

## யாழ். அரச அதிபர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுகின்ற பதிவு நடவடிக்கைகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை கருத்திற்கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் குடியிருப்பாளர்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்படுவதாகவும் புகைப் படங்கள் எடுக்கப்படுவதாகவும் வெளிவந்த செய்திகள் தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்:

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போது அரச அதிபர் என்ற ரீதியில் என்னிடம் கேட்கவேண்டிய அவசியம் படையினருக்கு கிடையாது. அது பாதுகாப்பு அமைச்சினூடாகவே மேற்கொள்ளப்படுகின்ற விடயம். அந்தவகையில் தான் யாழ்ப்பாணத்தில் பதிவுகள் மேற்கொள்வது தொடர்பாகவும் எனக்கு உத்தியோகபூர்வமான அறிவித்தல் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும், யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்ற குற்றச்செயல்களை தடுப்பதற்காகவே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை மட்டும் என்னால் உறுதிப்படக் கூறமுடியும். இந் நடவடிக்கையையிட்டு பொதுமக்கள் கவலை கொள்ளத் தேவையில்லை என்று குறிப்பிட்டார்.

இப்பதிவுகள் சம்பந்தமாக யாழ். மாவட்ட இராணுவ தலைமையகத்தினைத் தொடர்பு கொண்டு கேட்டபொழுது,

யாழில் தற்சமயம் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதையிட்டு எமக்குப் பல்வேறு தரப்பினரும் முறைப்பாடு செய்திருந்தனர். வெளி மாவட்டங்களிலிருந்து வருபவர்களாலேயே மேற்படி குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்திருந்தனர். ஆகையினால், வெளிமாவட்டங்களிலிருந்து யார் யாரெல்லாம் யாழில் தங்கியிருக்கிறார்கள் என்பதை அறிவதற்கே இந்த பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். இது குற்றச்செயல்கள் மேலும் அதிகரிக்காமல் தடுக்கும் ஒரு நடவடிக்கையே ஒழிய, மக்



களை துன்பத்துக்குள்ளாக்கும் நோக்கம் எதுவும் எமக்கும் கிடையாது.

தற்சமயம் இரவுவேளைகளில் அதிகளவிலான படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். அவர்களை மீறி எந்தவிதமான தீய செயலும் யாழில் நடைபெறாது. அமைதியாக இருக்கின்ற யாழில் இதுபோன்ற சேறு பூசும் தீய செயல்களில் ஈடுபடுபவர்களை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதே எங்களுடைய தலையாய கடமையாகும் எனவும், யாழ் மாவட்ட தலைமையக தொடர்பாளர் தெரிவித்தார்.

## ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் தலையாளிப்பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து ஆண் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கொக்குவில் சபாபதிவேன் தலையாளிப்பகுதியில் உள்ள வீடொன்றில் வசித்து வந்த பாலசுப்பிரமணியம் சிவஸ்கர் (வயது35) என்பவரது சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டு ள்ளது.

மனநோயாளியாகிய இவர் நேற்று அதிகாலை 4.00 மணிமுதல் காணாமல்போயிருந்தார் எனவும் இதன் பின்னர் மாலை 6.00 மணியளவில் வீட்டுக்கிணற்றில் இருந்து இறந்த நிலையில் இவரது சடலம் மீட்கப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

பொலிஸாரின் முன்னிலையில் மீட்கப்பட்ட இச்சடலம் யாழ். போதனாவைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டனர். (பா,மி)

## வருடாந்த ஒன்றுகூடல்

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று காலை 11.00 மணிக்கு ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் சபையின் செயலாளர் திருமதி பு. சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில், யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் அவசர பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வலி.மேற்கு பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் சாம்பசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதேசங்களின் அபிவிருத்தி சம்பந்தமாக இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்படவுள்ளதால் அனைத்துச் சனசமூக நிலையப் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (மி)

## கடற்கரை வீதி துரித புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் ஊடாகச் செல்லும் கடற்கரை வீதிப் புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டத்தில், வீதியை முற்றாகக் கிளறி, அகலித்து காத்திரமான அமைப்பில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடற்கரை வீதியில், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகப் பகுதியிலிருந்து ஆரம்பமான வேலைகள் சவக்காலைச் சந்தியைத் தாண்டி புனித செபஸ்தியார் ஆலய முன்றல் வரை நடந்தேறி முடிந்துள்ளது.

இவ் வீதிப் புனரமைப்பு வேலைகள் தொடர்ந்து கல்லுண்டாய் வரைக்கும் கரையோர வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (68)

## மஹோற்சவம்

(வடமராட்சி)

உடுப்பிட்டி-இமையாணன் அருள்மிகு துவாலி வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் காலை 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.(100)

## மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின் மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின் விநியோகம் வழங்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.


### சிறு விளம்பரம்


**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (017)



### பாராட்டி வாழ்த்துகிறோம்



**திருமண பந்தத்தில் 30 ஆவது ஆண்டைக் கடக்கும் எம் அன்புப் பெற்றோர்**

**க.தர்மலிங்கம்**
**த.சந்திரவதனா**


**தம்பதிகள் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்**

**மகள் குரு, ஹேமா, தயா, பேரப்பிள்ளைகளான சுஜி, கஜி, மருமகன் ஏமி.**

(C/504)


## மரண அறிவித்தல்

### மத்தேசு தேவசகாயம் (சின்னத்துரை)



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட மத்தேசு தேவசகாயம் 03.02.2011 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி மத்தேசு தம்பதியினரின் அன்பு மகனும், அருளம்மாவின் அன்புக் கணவரும், சூசைப்பிள்ளை, சுவந்திரராசா, காலஞ்சென்ற பாலரத்தினம் மற்றும் இருதயராசா (ஜேர்மனி), ஜேம்ஸ் (பிரான்ஸ்), கிறிஸ்ரீனா, புஸ்பராசா (சுவிஸ்), அன்ரன் தேவதாஸ் (பிரான்ஸ்) மரிய பற்றிமா ஜெயராணி (பிரான்ஸ்), கெல்வின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றீற்றம்மா, ஜசிந்தா (ஜேர்மனி), லலிதா, றோகினி (பிரான்ஸ்), செல்வராசா (செல்வம் ஆட்ஸ், சுன்னாகம்), செறின் (சுவிஸ்), எட்மன் (பிரான்ஸ்), தர்சினி (பிரான்ஸ்), சாமினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.02.2011) இன்று புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இன்றைய தினம் பி.ப. 3.00 மணியளவில் கோப்பாய் தெற்கு, புனித மரியன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மாதா கோயில் முன்பாக,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல் :
செ.செல்வராசா (மருமகன்),
செல்வம் ஆட்ஸ், சுன்னாகம்,
T.P : 0773361679

(C/105)

## மரண அறிவித்தல்

### செல்வி ஜீவா கந்தையா (சீவம்)

ஐயர் வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், 19 1/A, சிறிமகாபோதி வீதி, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஜீவா கந்தையா (சீவம்) கடந்த 06.02.2011 ஞாயிற்றுக்கிழமை இறைபத மெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா அன்னம்மா தம்பதியினரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்ற கண்மணி வல்லிபுரம் மற்றும் பாலசிங்கம், சிவபாக்கியம், இரத்தினம், குணசிங்கம், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் புஷ்பரத்தினம் மார்க்கண்டு ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (09.02.2011) நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று காலை 10.00 மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஐயர் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.
0757026392

தகவல் :
குடும்பத்தினர்.

(C/103)

நிறைந்த அறிவு பெற்றிருந்தும் அதைப் பயன்படுத்தாது இருப்பதைவிட, குறைந்த அறிவு பெற்றிருப்பவன் அதைப் பயன்படுத்துவதே எல்லையில்லாத பெருமை சேர்க்கும்.

- கலீல் கிப்ரன் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## பட்டினிச்சாவை எதிர்நோக்கி...

மீண்டும் தொடர்ச்சியாகப் பெய்துவரும் பெரும் மழைப்பொழிவு காரணமாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உட்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் பேரவலத்தைச் சந்தித்து வருகிறார்கள்.

சீரற்ற காலநிலை, இயற்கையின் சீற்றம் என்பவற்றால் இலங்கையும் அவுஸ்திரேலியாவுமே பெரும் பாதிப்புக்குள்ளாகிய நாடுகளாகும்.

பசுபிக் சமுத்திரத்தின் மேற்குத் திசையில் இவ்விரு நாடுகளும் அமைந்திருப்பதால், அத்திசையில் அதிகரித்துக் காணப்படும் வெப்ப நிலையே இம்மழைப்பொழிவுக்குக் காரணமென வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காரணம் எதுவாக இருந்தாலும் பாதிப்புக்குள்ளாகி இழப்புக்களுடன் ஏதிலிகளாகி வருவது எம்மக்கள்தான் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த ஜனவரி மாதம் தொடர்ச்சியாகப் பெய்த பெரும் மழைப்பொழிவினால் கிழக்கு மாகாண மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தனர்.

அந்தப் பாதிப்பிலிருந்து மீண்டெழும்போது மீண்டும் வெள்ள அனர்த்தம் பாதித்திருப்பதை என்னவென்று சொல்வது?

கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் மழையினால் வடக்கே வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் பெருமளவு பாதிப்புக்குள்ளாகியிருப்பதுடன், இலட்சக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மக்களை மழை வெள்ளம் மட்டும் பாதிக்கவில்லை. சுகாதார சீர்கேட்டின் விளம்பில் உள்ள இந்த மக்கள் பட்டினிச்சாவையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கக் கிளைகளில் உணவுப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவிவருவதோடு, அவற்றைக் கொழும்பிலிருந்து எடுத்து வருவதில் போக்குவரத்துச் சிக்கல்கள் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களும் பெரும் அவலத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளில் 7401 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 29 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு சிரமங்களின் மத்தியில் மீளக்குடியமர்ந்த இந்த மக்கள் மீண்டும் மீண்டும் அவல வாழ்க்கையைச் சுமந்து வருவது மிகவும் கவலைக்குரிய விடயமாகவே இருந்துவருகிறது.

யுத்த அழிவுகளிலிருந்து ஓரளவுக்கு மீண்டு வந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிய இம்மக்கள், தொடர்ச்சியாக அவலங்களைச் சந்தித்து வருவதைப் பார்க்கும்போது மனவேதனை அளிப்பதாக உள்ளது.

சோதனைமேல் சோதனைகளை அடுத்தடுத்து அனுபவித்துவரும் இம்மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்கு மனிதநேயம் கொண்டவர்களும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும், மத ஸ்தாபனங்களும், செல்வம் படைத்தவர்களும் முன்வரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

-ஆசிரியர்-

# வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 15 பாடசாலைகளில் மக்கள் தஞ்சம்

வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட ஓமந்தைக் கோட்டப் பிரிவில் 10 பாடசாலைகளிலும், நெடுங்கேணி கோட்டப் பிரிவில் 05 பாடசாலைகளிலும் மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர்.

ஓமந்தைக் கோட்டப் பிரிவில் நொச்சிமோட்டை அ.த.க. பாடசாலை, மாணிக்கர் இலுப்பங்குளம் பாடசாலை, பம்பமடு அ.த.மி பாடசாலை,சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், சுந்தரபுரம் அ.த.க பாடசாலை தரணிக்குளம் வித்தியாலயம், மற வன்குளம் அ.த.க பாடசாலை, பாலமோட்டை வித்தியாலயம், கோயில்குஞ்சுக்குளம் வித்தியாலயம்,கல்மடு மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளிலும்,

நெடுங்கேணி கோட்டப்பிரிவில் கனகராயன் குளம் மகாவித்தியாலயம்,மதியாமடு அ.த.க பாடசாலை, புளியங்குளம் மகா வித்தியாலயம், ஒலுமடு மகாவித்தி யாலயம், பட்டிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளிலும் மக்கள் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகள் தற்போது வவுனியா அரசாங்க அதிபரினால் நெடுங்கேணி பிரதேச செயலகர் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

கனகராயன் ஆற்றிற்கு குறுக்கான வீதியும், நெடுங்கேணியிலிருந்து ஒலுமடுவினுடாக பட்டிக்குடியிருப்பு வீதியும் இன்னமும் போக்குவரத்திற்காக திறந்து வைக்கப்படவில்லை.

மேலும் இந் நெடுங்கேணிக் கோட்டப் பிரிவில் நெடுங்கேணிப் பிரதேச செயலகர் தலைமையில் சமூகசேவை உத்தியோகத்தர், கிராமசேவகர் போன்றோரைக் கொண்ட குழுவினால் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் சொத்துடமை அழிவுகள், தொற்றுநோய் நிவாரண வசதிகள் போன்ற நடமாடும் சேவைகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (12)

## கட்டாக்காலி நாய்களினால் பல்வேறு தரப்பினரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் நடமாடும் கட்டாக்காலி நாயகளினால் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்களும் விடுதிகளில் தங்கும் நோயாளிகளை பார்வையிட வருபவர்களும் பெரும அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கட்டாக்காலியாகத் திரியும் நாய்களை இப்பகுதியிலிருந்து அகற்ற வேண்டும் எனவும் இவ் நடவடிக்கையினை விரைவாக மேற்கொள்ளுமாறும் உரிய அதிகாரிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (பா,மி)

## "குடி" காரர்களின் அட்டகாசம் தரையிறங்கிய விமானம்

சவூதியிலிருந்து இந்தோனேசியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த விமானமொன்று இடைநடுவில் அவசரமாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தரையிறக்கப்பட்டது.

அரேபியப் பயணிகள் மது போதையில் முறைகேடாக நடந்துகொண்டதால் நிலைமையை சமாளிக்க முடியாததால் விமானத்தைத் தரையிறக்கியதாக விமானி குறிப்பிட்டுள்ளார். இவர்கள் விமானப்பயணிகளுக்கும் பணியாளர்களுக்கும் தொந்தரவு கொடுத்துள்ளனர். அவ்வாறு நடந்துகொண்ட ஐவர் விமான நிலையப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை விமான நிலைய பொலிஸார் தீவிர விசாரணைக்குட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தற்காலிக வீடுகள் அமைக்க உதவுமாறு மக்கள் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மன்னகுளம் கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட மக்கள் தாம் தங்குவதற்கு தற்காலிக வீடுகள் அமைப்பதற்கா வது உதவுங்கள் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குஞ்சுகுளம், கொல்லர் புளியங்குளம். மன்னகுளம், புதுவிழாங்குளம் புற்குளம் பகுதி மக்களே இவ் வேண்டுகோளை விடுத்துள்ள னர்.

தற்போது அரசாங்கத்தினால் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்ட போதும் அதனைப் பாதுகாப்பதற்காக "தறப்பாள்" கொட்டகைகள் கூட இல்லாமல் அவதியுறுகின்றோம். எனவே எமது கஷ்டங்களைக் கருத்திற் கொண்டு உதவுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (12)

## புலிகளின் பேச்சாளரெனத்தெரிவித்து இலங்கைத் தமிழர் மீது வழக்கு பதிவு

ஜேர்மனியில் புலிகள் அமைப்பின் பேச்சாளராக இருந்த இலங்கைத் தமிழருக்கு எதிராக தீவிரவாத அமைப்புடன் தொடர்புபட்டிருந்ததாக நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜேர்மனியின் சமஷ்டி நீதிஅதிகாரிகள் தகவல் வெளியிடுகையில்:

ஜேர்மனி நாட்டின் குடியுரிமை பெற்ற 35 வயதான - அகிலன் என்ற தமிழர். கடந்த நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டார். இவர் மீது கடந்த மாதம் 23 ஆம் திகதி நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு முன் வைக்கப் பட்டுள்ளது.

புலிகள் அமைப்பின் ஒரு அங்கமான தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பேச்சாளராக 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை இவர் பணியாற்றியுள்ளார்.


இவர் மீது வெளிநாட்டு தீவிரவாத அமைப்பு ஒன்றில் உறுப்பினராக இருந்ததாக குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜேர்மனியில் ஏற்றுமதிச் சட்டங்களை மீறியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 370,000 யூரோ பெறுமதியான கருவியொன்றை கொள்வனவு செய்து புலிகளுக்கு அனுப்பி வைத்ததற்காகவே ஏற்றுமதிச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதேவேளை,

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த விஜேகணேந்திரா,சசிதரன், கோணேஸ்வரன் ஆகியோருக்கு எதிராக கடந்த ஓகஸ்ட் மாதம் ஜேர்மனி அதிகாரிகள் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிங்கள மகாவித்தியாலயத்தில் தங்குமிடம் அமைக்கப்படுகின்றது



(யாழ்ப்பாணம்)

யாழ்போதனாவைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுவருகின்ற புதிய மாடிக்கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபடவுள்ள 300 வரையான கட்டடப்பணியாளர்கள் தங்குவதற்கு யாழ் சிங்கள மகாவித்தியாலயம் அமைந்திருந்த பகுதியில் விசாலமான தங்குமிடம் அமைக்கப் பட்டு வருகின்றது.

ஜப்பான் அரசின் நிதியுதவிடன் நிர்மானிக்கப்பட்டு வரும் இம் மாடித்தொடர் நிர்மா ணிப்புப் பணிகளை கொழும்பு நாரஹேன்பிட்டியவைத் தலைமையகமாகக் கொண்ட "மாகா பொறியி யல் தனியார் நிறுவனம்" ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவுள்ளது. இந்நிறுவனத்தின் சுமார் 300 வரையான கட்டட தொழிலாளர்கள் இந் நிர்மாணப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

இவர்களின் தங்குமிடம் மற்றும் உணவுப்பகுதிகள் யாழ் சிங்கள மகாவித்தியாலயம் அமைந்திருந்த வளாகப் பகுதியில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வகைப் பகுதியில் மண் இடப்பட்டு உயர்த்தப்பட்டு தகரக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு இவற்றில் பணியாளர்கள் தங்கியிருக்கக் கூடிய வகையில் வசதிகள் மேற்படி நிறுவனத்தால் செய்து கொடுக்கப்படவுள்ளது.

தற்சமயம் இந்நிறுவனத்தின் 35 வரையான பணியாளர்கள் இவ் ஆரம்ப கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (பா,மி)

# மாணவர் விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப கற்பித்தல் உத்திகளை மாற்ற வேண்டும்

(அச்சுவேலி)

ஒருவரது உள்ளத்தின் உள்ளக்கிடக்கைகளை அவரது முக பாவத்தின் மூலம், செயற்பாடுகளின் மூலம் இனங்கண்டு கொள்ள முடியும். துன்பமாயினும் சரி இன்பமாயினும் சரி அலலது விருப்பு வெறுப்புக்கள் ஆயினும் சரி அத்தனையும் முகத்தனால் முன் கொண்டுவர முடியும். இவ்வாறே பிள்ளைகளும் தம் கல்வி மீதும், விளையாட்டின் மீதும் உள்ள விருப்பினை மகிழ்ச்சியின் மூலமாக தம் முகங்களில் காண்பிக்கின்றனர்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர் நா.மகேநதிரராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கற்றலிலே மாணவர்கள் விருப்புடன் ஈடுபடும் போது அவர்கள் தம்மையே மறந்து அதில் ஒன்றித்துவிடுகின்றார்கள். பிள்ளைகள் விருப்புடனும்,மகிழ்ச்சியுடனும் கற்றலில் ஈடுபடவேண்டுமாயின் அவர்களின் விருப்பு, வெறுப்பிற்கேற்ப கற்பித்தல் உத்திகளை மாற்றியமைத்து உரிய கற்றல் உபகரணங்களின் காட்சிப்படுத்தலுடன் ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடல் வேண்டும். இது தான் ஓர் ஆசிரியர் செய்ய வேண்டிய முதற் செயலாகும்.

பிள்ளைகளுக்கு புரிந்து கொள்ள முடியாத விடயத்தை காட்சிப்படுத்திக் கற்பிக்கும் போது அதன் பெறுபேறும் உயர்வடையும். கல்வியில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலே விளையாட்டுத்துறைக்கு நாம் அளிக்கும் முக்கியத்துவம் பிள்ளைகளின் உடல் உள நலன்விருத்திக்கு பெரிதும் துணைபுரிவது மட்டுமன்றி அவர்களின் ஆளுமைவிருத்தி, தலைமைத்துவப் பண்பு ஆகியவற்றையும் மேலோங்கச் செய்கின்றது.

மாணவர்கள் விளையாட்டின் மூலம் எவ்வளவிற்கு மகிழ்ச்சி அடைகின்றார்களோ அதே அளவிற்கு கல்வியிலும் மனமகிழ்ச்சி



அடையவேண்டும். அதுதான் அவர்களது உண்மையான கற்றலின் வெளிப்பாடும் முகமலர்ச்சியுமாகும் என்றார். (03)

## எச்சரித்து விடுதலை

(கொழும்புத்துறை)

சாட்டியில் குளிக்கச்சென்ற இரு குழுக்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் அடிபாட்டில் முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

நேற்று முன்தினம் 1.45 மணிக்கு கொக்குவில் பகுதி இளைஞர் குழுவினருக்கும், குருநகர் பகுதி இளைஞர்களுக்குமிடையல் கோஷ்டி மோதல் ஏற்பட்டது.

மதுபோதையில் அட்டகாசம் புரிந்த இரு இளையோர் குழுவினரையும் நேற்று மாலை யாழ்.பொலிஸார் கடுமையாக எச்சரித்து விடுதலை செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (52)

## மணியந்தோட்டம் - கௌதாரிமுனை படகுச்சேவை மீண்டும் ஆரம்பமானது

(கொக்குவில்)

கொழும்புத்துறை, மணியம் தோட்டம் ஊடாக வன்னி கௌதாரிமுனைக்கு படகுச் சேவைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சேவைகளை நடத்தி வந்த பூநகரி, கடற்றொழிலாளர் சங்கம் சேவையை நிறுத்தியிருந்தது. கேரதீவு, சங்குப்பிட்டி வழியாக நேரடிப் போக்குவரவுகள் ஆரம்பித்ததை அடுத்து சங்கம் அதனை நிறுத்திவிட்டது தெரிந்ததே!

அதேவேளை மண்ணித்தலை, வினாசியோடை ஆகிய பகுதிகளில் இயங்கும் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள், இருகிராமங்களைச் சேர்ந்த மக்களின் வேண்டுகோளைத் தொடர்ந்து இச்சேவைகள் தொடங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சங்கத்துக்குப் படகுச் சேவைகளை நடத்திவந்த குருநகரைச சேர்ந்த சிற்றம்பலம் கிருபாகரன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள படகுச் சேவை நாளொனறிக்கு ஒரு தடவை மட்டுமே நடத்தப்படுவதாகவும் காலை 7 மணிக்கு மணியந்தோட்டத்திலிருந்து செல்லும் படகு பிற்பகல் 2.30 மணிக்கு கௌதாரி முனையிலிருந்து புறப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (68)



நேற்றுமுன்தினம் யாழ்.காங்கேசன்துறை வீதியில் பாற்சாலை ஒன்று திறந்துவைக்கப்பட்டது. இதனை யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், வட மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம் ஆகியோர் திறந்துவைப்பதனைப் காணலாம். (பா)

## வாகனத் திருட்டு முறியடிக்கப்பட்டது

(அச்சுவேலி)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாகனத் திருட்டு முயற்சி யாழ்.பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வாகனம் திருத்தும் நிறுவனம் ஒன்றில் வாகன உரிமையாளரால் திருத்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்டிருந்த மிகப் பழமை வாய்ந்த இவ் வாகனம் இரண்டு சில்லு உழவு இயந்திரம் ஒன்றில் யாழ்ப்பாணத்தில் இருந்து வடமராட்சிப் பகுதிக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோது வாகன உரிமையாளர் வழங்கிய தகவலையடுத்து பொலிஸாரால் இம்முயற்சி முறியடிக்கப்பட்டதுடன் காரும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிகப் பழமைவாய்ந்த கார்களை செல்வந்தர்கள் பல லட்சம் ரூபாவிற்குக் கொள்வனவு செய்து கண்காட்சிக்கு வைத்து வருவது குறிப்பிடத்தக்கது.(03)

## வீதியோரத்தில் நொருங்கிக் கிடக்கும் போத்தல்களால் பயணம் செய்வதில் சிரமம்

(அச்சுவேலி)

வல்லை வெளிப்பகுதியில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியின் ஓரத்தில் பொறுப்பற்ற முறையில் வெற்று மதுசாரப் போத்தல்கள் கொட்டப்பட்டு வருவதாக அப்பகுதியால் பயணிக்கும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

வீதியின் ஓரத்தில் பல்வேறு அளவுடைய கண்ணாடியினாலானதும் மற்றும் பிளாஸ்ரிக்கினால ஆனதுமான வெற்று மதுசாரப் போத்தல்கள் இவ்வாறு ஆங்காங்கே கொட்டப்பட்டுள்ளன. இதில் பல கண்ணாடிப் போத்தல்கள் உடைந்து நொருங்கிய நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு பொறுப்பற்ற முறையில் மதுசார விற்பனை நிலையங்களினால் வீதியோரத்தில் கொட்டப்படும் போத்தல் கழிவுகளினால் பாதசாரிகளுக்கும் மற்றும் வாகனங்களில் ரயர்களுக்கும் சேதம் விளைவிக்கக்கூடிய ஆபத்து நிலை காணப்படுகின்றது. ஆகவே இத்தகைய பொறுப்பற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை இனங்கண்டு உரிய தண்டனை வழங்க வேண்டும் எனப் பலரும் ஆதங்கத்துடன் கூறுகின்றனர். (03)

## நவீன வசதிகளுடன் கூடிய பயணிகள் குடை அமைப்பு

(யாழ்.நிருபர்)

காரைநகரின் நுழைவாயிலாக விளங்கும் வலந்தலைச் சந்தியில் நவீன வசதிகளுடன் கூடிய பயணிகள் குடை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் அமைக்கப்படவுள்ள பயணிகள் குடை நிறுவுவதற்கென அண்மையில் வலந்தலைச் சந்தியில் உள்ள காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. விரைவில் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக காரைநகர் அபிவிருத்திச் சபையின் தலைவர் மகாராணி க.சோமசேகரம் தெரிவித்தார். (10)

## சேதமாகிவரும் குருசு மதகு

(கொக்குவில்)

மானிப்பாய் - யாழ்வீதியில் அமைந்துள்ள குருசு மதகு இரண்டு வருடங்களுக்கு மேலாக சேதமடைந்து போயுள்ளது.

ஆனைக்கோட்டை, மூன்றாம கட்டைப் பகுதியில் அமைந்துள்ள மதகின் வீதியோரப் பகுதி ஆவென்று பிளந்த நிலையில் இருந்து வருகிறது.

அப்பகுதியூடாகச் செல்லும் வாகனங்களின் சில்லு மேற்படி பொறியில் சிக்குண்டால் பலத்த அனர்த்தம் நிகழுமென எச்சரிக்கப்படுகிறது.

மதகில் ஏற்பட்ட உடைவு சிறிது சிறிதாக அகலித்துக் கொண்டிருப்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. (68)

## தொடர் சொற்பொழிவு

(யாழ்.நிருபர்)

வரலாற்றுப் பெருமை மிக்க மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் பெருந்திருவிழாவில் ஈழத்தின் பிரபல ஆன்மீக சொற்பொழிவாளர் சைவப் புலவர் பொன் சுகந்தனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் தினமும் மாலை 6.00 மணிமுதல் இராமாயணமும் மானிட வாழ்வும் என்ற தலைப்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

## மெய்வல்லுநர் போட்டி

(அச்சுவேலி)

யாழ்.புத்தகலட்டி ஸ்ரீவிஷ்னு வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வித்தியாலய மைதானத்தில நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்துகொள்ளவுள்ளார்.

ஸ்ரீலங்கா நிறுவனத்தின் செயற்திட்டப் பொறுப்பதிகாரி ரி.பகீரதராஜ், வலிகிழக்கு பிரதேச சபை உபஅலுவலக பொறுப்பதிகாரி ஏ.கனகராசா, முள்ளியவளை றோ.க.த.க பாடசாலை ஓய்வுநிலை அதிபர் எஸ்.அரிராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளார்கள். (03)

## சேவை நலன் பாராட்டு விழா

(பளை)

கடந்த 37 வருடங்களாக கல்விப் பணிபுரிந்த திருமதி குமாரவேலு இராசாம்பிகை அவர்களின் சேவைநலன் பாராட்டுவிழா அண்மையில் புலோப்பளை றோ.க.த.க பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ்.ஜீவரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா, சிறப்பு விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேசசபைச செயலாளர் சி.சிவப்பிரகாசம், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், நலன விரும்பிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (70)

## அலங்கார உற்சவம்

காரைநகர் வலந்தலைச் சந்திக்கு அருகாமையில் உள்ள மடததுக்கரை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. இவ் உற்சவத்தில் 11 ஆம் நாள் பூங்காவன உற்சவம் நடைபெறும். (50)

# வியாபார ரீதியிலான உத்திகளைக் கையாண்டு பால் உற்பத்திப் பொருட்களை தயாரிக்க வேண்டும்

### பால்சாலை திறப்பு விழாவில் கூட்டுறவு உதவி ஆணையாளர்



(யாழ்ப்பாணம்)

நட்டத்தில் இயங்கிவருகின்ற கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தப் பால்சாலையை சிறந்த முறையில் நிர்வகித்து இலாபமீட்ட வேண்டும். வியாபார ரீதியிலான உத்திகளைக் கையாண்டு பால் பவுடர்களில் இருந்து நுகர்வோரைத் திசை திருப்பும் வகையில் எமது மக்களிடம் இருந்து பாலைக் கொள்வனவு செய்து பால் உற்பத்திப் பொருட்களைத் தயாரித்து சந்தைப்படுத்த வேண்டும் என, யாழ்.கால நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பால்சாலையைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இப்பாற்சாலையை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதனும், வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கமும் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தனர்.

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வி.குணபாகன் தலைமையில் நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

இப்பாற்சாலையில் வியாபாரம் முதலில் குறைவாக இருந்தாலும் அதையிட்டுச் சோர்ந்து விடமால் எமது மக்கள் நுகரக் கூடிய விதத்தில் பால் உற்பத்திப் பொருட்களைத் தயாரித்து அதனுடன் சிற்றுண்டி மற்றும் பிஸ்கற் போன்றவற்றையும் சேர்த்து நுகர்வோருக்கு வழங்க வேண்டும்

இப்பாற்சாலை அமைந்துள்ள இடம் மக்கள் அதிகம் நடமாடும் பகுதியாகும். மற்றும் தனியார் பஸ்தரிப்பிடமும், சந்தையும் ஏனைய அலுவலகங்களும் உள்ளன. எனவே வியாபார நடவடிக்கைக்குப் பொருத்தமான பகுதியாகவும் இப்பகுதி அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்-

எமது பகுதி வளங்களில் ஒன்றான பசுப்பாலைச் சந்தைப் படுத்தும் திட்டத்தில் ஒன்றாக இப்பால்சாலை அமைகின்றது. பசுப பாலை வலிகாமம், தென்மராட்சி போன்ற பிரதேசங்களில் இருந்து சேகரித்து அவற்றை இப்பாற்சாலையின் மூலம் சந்தைப் படுத்தவுள்ளதாகவும், அத்துடன் இவ்வாறு பசுப்பாலைக் கொளவனவு செய்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களையும் சேர்த்து விற்பனை செய்ய வேண்டும். இதன மூலம் பசுப்பால் உற்பத்திப் பொருட்களின் தேவையை மேலும அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்தார். இந்நிகழ்வில் கால்நடை கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (பா, மி)

# எரிபொருள் விற்பனை நிலையம் புனர்நிர்மாணம் செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வின்சர் தியேட்டர் சந்தியில் இயங்கி வரும் 'மாக்பெட்' எரிபொருள விற்பனை நிலையம் விரைவில் நவீன முறையில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ்.பிராந்திய அலுவலக வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இந்த எரிபொருள் விற்பனை நிலையத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான அனுமதியை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமைக் காரியாலயம் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.நகரின் மத்தியில் உள்ள இந்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் குடாநாட்டின் பல பாகங்களில் இருந்து வரும் வாகனங்கள், தங்களுக்குரிய எரிபொருளை இந்த நிலையத்தில் இருந்தே பெற்றுச் செல்கின்றன.

இதேவேளை, ஒன்றரை வருடங்களுக்கு முன் பழுதடைந்திருந்த மண்ணெண்ணைத் தாங்கிக்குப் பதிலாக புதிய தாங்கி ஒன்று வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்ப்பதற்கு மதம் தடையா?

(கொக்குவில்)

யாழ்.நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் இயங்கும் இந்து, கிறிஸ்தவ கல்லூரிகள் வேறு மதரீதியான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளாமல் கைவிரித்து வருவதாக சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

மத பீடங்களின் நிதியில் அவர்களது கட்டுப்பாடுகளுக்குள் நிர்வகிக்கப்படுகின்ற பாடசாலைகள் என்றில்லாமல் அரச நிதியியைப் பெற்று மதங்களின் பெயர்களில் இயங்கும் பொதுப பாடசாலைகளும் இக் கைங்கரியத்தை மேற்கொண்டு வருவதாகவும் அவர்களால் புகார் கூறப்படுகின்றது.

இவர்களால் புறக்கணிக்கப்பட்டால் அம்மாணவர்கள் கல்வியைப் பெறுதல் எங்ஙனம்? இல்லாமலும் அவர்கள் இந்நாட்டுப் பிரஜைகள் இல்லாமல் இந்நொரு நாட்டவர்களாகவா கணிக்கப்படுகிறார்கள்? என்றும் அந்தத் தரப்புப் பெற்றோர் கேள்வி எழுப்புகின்றனர். (68)

# செஞ்சிலுவை நடமாடும் சேவை 2680 பேர் பயனடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையினரின் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் நடத்தப்பட்டு வரும் நடமாடும் மருத்துவ சேவையின் மூலமாக அப்பகுதிகளைச் சேர்ந்த 2680 பேர் இதுவரை பயனடைந்துள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் இப்பகுதிகளில் குறிப்பாக மாமுனை, செம்பியன்பற்று, உடுத்துறை, ஆழியவளை ஆகிய பகுதிகளில் நடைபெற்றுவரும் இந்த நடமாடும் மருத்துவ சேவையின்போது சாதாரண காய்ச்சல், தடிமன், ஆஸ்த்துமா, சிறுகாயங்கள், தலையிடி போன்ற நோய்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் மேலதிக சிகிச்சை தேவைப்படுவோர் பிராந்திய வைத்தியசாலைகளுக்குச் சென்று சிகிச்சை பெறுமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலும் இப்பகுதிகளில் கடந்த ஒக்ரோபர் மாதம் 452 பேரும், நவமபர் மாதம் 633 பேரும், டிசெம்பர் மாதம் 682 பேரும், ஜனவரி மாதம் 851 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் இவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# தெளிகருவிகளைப் பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுப்பு

(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேசத்தில் விவசாயத் தோட்டங்களைச் செய்யும் விவசாயிகளுக்கு குறித்த பிரதேச விவசாயத் திணைக்களத்தினால் தெளி கருவிகள் வழங்கப்படவில்லையென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மற்றப் பிரதேசங்களிலுள்ள விவசாயத் திணைக்களத்தினால் இந்தத் தெளி கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே கரவெட்டிப் பிரதேச விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இது தொடர்பான கவனம் எடுத்து தங்களுக்கும் தெளிகருவிகளைப் பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (18)

# சுயதொழில் பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

(பளை)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கம் இலவச தையல் பயிற்சிநெறிக்கான வறுமைக்கோட்டுக்குட்பட்ட பெண்பாலரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இதில் இடப்பெயர்வால் பாதிப்புற்று சுயதொழில் ஆர்வம் உடையோர், 8ஆம் வகுப்புக்கு மேல் கல்விகற்றோர் பளைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படவிருக்கிறது.

பயிற்சி நெறி இலவசமாக வழங்கப்படுவதுடன் அதற்கான உபகரணங்கள், துணிவகை நிறுவனத்தால் இலவசமாக வழங்கப்பட இருக்கிறது. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி பெறவிரும்புவோர் விண்ணப்பங்களை இம்மாதம் 15 ஆம திகதிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்குமாறு சங்கச் செயலாளர் வே. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (70)

# புல்லுக்குளம் இருக்கை விஷமிகளினால் சேதம்

(கொக்குவில்)

யாழ்.புல்லுக்குளத்தைச் சுற்றிப் புதிதாக அமைக்கப்பட்டிருந்த இருக்கைகளில் ஒன்று விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.

சமீபகாலத்தில் பெருந்தொகைப் பணத்தில் மாநகர சபையால் புல்லுக்குளமும், சுற்றாடலும் அழகுபடுத்தப்பட்டிருப்பது அறிந்ததே.

இந்நிலையில் அப்பகுதிக்கு விஜயம் செய்யும் உல்லாசப் பிரயாணிகள் அமர்ந்திருந்து இளைப்பாறிச் செல்லும் வகையில் குளத்தைச் சுற்றி ஒரு தொகுதி ஆசனங்கள் சீமெந்தினால் அமைக்கப்பட்டுள்ளது.

அவ்வகை இருக்கைகளில் ஒன்றே விசமிகளின் சேஷ்டைக்கு உள்ளாகிச் சேதமடைந்து காணப்படுகிறது. (68)

# மகோற்சவம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு கரமத்தைக் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை காலை கொடியேற்றததுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் இடம்பெறவுள்ளது.

13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 108 சங்காபிஷேகமும், 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும்; தீர்த்தோசவமும் இடம்பெறுவதுடன் மறுநாள் சனிக்கிழமை பூங்காவனம் மற்றும் திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளதென ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் சி.தில்லையம்பலம் தெரிவித்துள்ளார்.

# பொதுக் கூட்டம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் ப.நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் எதிர் வரும் 12 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத் தலைவர் ஆ.அப்புத்துரை தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் சங்கத்தின் நிதி நிலமை, கிராமிய வங்கிகளின் நிதிநிலமை என்பன பற்றிக் கலந்துரையாடப்படுவதுடன் இயக்குநர் சபையிலிருந்து பதவி விலகிய உறுப்பினர்களுக்குப் பதிலாக புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (மி,04)

# இன்றைய பலன்

(09.02.2011 – புதன்கிழமை) –ஆதினி–

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி தை 26

இராகுகாலம்.12.35– 2.05, சுபநேரம் 5.05 –06.35, ஷஷ்டி மு.இ.7.40, அச்சுவினி பி.இ 5.13, மரணயோகம். ஷஷ்டி விரதம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– காரிய சித்தி, முயற்சி பலிதம், குடும்பச் சிறப்பு

ரிஷபம்:– நண்பர் சேர்க்கை, நற்செய்தி வரல், கொண்டாட்டம்.

மிதுனம் :– உயர்ந்தோர் நட்பு, கௌரவம் உயர்தல், பெரியோர் ஆசி.

கடகம்:– தேகநல அபிவிருத்தி, பணவரவு, நண்பர் சேர்க்கை.

சிம்மம்:– பெரியோர் உதவி, பாராட்டப்படல், தாய் வழி உதவி.

கன்னி :– நற்செயலில் விருப்பம், ஆரோக்கியம், தொழிலில் இலாபம்.

துலாம் :– மனப்பயம், பொருள் இழப்பு, கௌரவம் பாதிப்பு

விருச்சிகம்:– அன்புள்ளவர்களின் நெருக்கம், சுபச் செலவு, பணவரவு

தனுசு:– வீணான எண்ணங்கள், அமைதிக் குறைவு, பகை வளரல்

மகரம்:– தேகநலன் விருத்தி, நண்பர்கள் ஆதரவு, தொழிலில் சிறப்பு.

கும்பம் :– தவறான எண்ணம், ஆசைகளால் தீமை, அரச பயம்.

மீனம்:– சன்மானம் கிடைத்தல், கௌரவம் உயர்தல், பெரியோர் ஆசி.

# தமிழக மீனவர்கள் மீதான கொலையுடன் இலங்கை கடற்படை தொடர்புபடவில்லை

## கிருஸ்ணாவிடம் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ்நாட்டு மீனவர்கள் கொல்லப்பட்ட விவகாரத்தில் இலங்கைக் கடற்படை தொடர்புபட்டிருக்கவில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா.விடம் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

திம்புவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது தமிழ்நாட்டு மீனவர்கள் இருவர் அண்மையில் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்டது குறித்து இந்தியா கவலையடைந்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா தெரிவித்தார்.

இலங்கை அதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ள தகவல்களின் படி கடற்படையினர் இந்தச் சம்பவங்களுக்குப் பொறுப்பாளிகள் அல்ல என்று கூறியுள்ளார்.

செயற்கைக்கோள் ஒளிப்படங்கள் மூலம் இந்தச் சம்பவங்களுக்கு கடற்படை பொறுப்பில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இருந்தபோதிலும், இந்தச் சம்பவங்களில் இலங்கைக் கடற்படையினர் தொடர்புபட்டுள்ளதற்கான ஆதாரங்கள் எதையேனும் இந்தியா சமர்ப்பித்தால் இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக மேலும் விசாரணை நடத்த முடியும் என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இந்திய மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் திம்புவில் சுமார் 30 நிமிடங்கள் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேவைப்படும் நிதி ஐ.நா.மீள் மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கையின் பல மாகாணங்களில் அடுத்தடுத்து இரண்டாவது தடவையாகவும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள நிலையில், அந்த நாட்டுக்கு அவசர உதவியாக தேவைப்படுகின்ற நிதியாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த தொகையை மீண்டும் மதிப்பீடு செய்து இம்மாத இறுதியில் அறிவிக்கவுள்ளதாக ஐ.நா அறிவித்துள்ளது.

51 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவசர உதவி நிதித்தேவையாக கடந்த மாதம் ஏற்பட்ட முதற்கட்ட வெள்ளப் பாதிப்பின் போது ஐ.நா அறிவித்திருந்தது.

15 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் மூன்று லட்சத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்து 744 தற்காலிக இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு தங்குமிடம், உணவு, குடிநீர் உள்ளிட்ட உடனடி உதவிகளைச் செய்வதற்கு இந்த அவசர நிதி தேவைப்படுவதாக ஐநாவின் கொழும்புத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பேஸ்புக் ஊடான குற்றச் செயல்கள் திரட்டப்படும் இலங்கையர் தகவல்கள்

(கொழும்பு)

உலகின் முன்னணி சமூக வலையமைப்பு இணையத் தளங்களில் ஒன்றான பேஸ்புக் இணையத் தளத்தின் ஊடாக குற்றச் செயல்களில் ஈடுபட்ட இலங்கையர்களின் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

எவ்வாறெனினும், நீதிமன்றத்தின் உத்தரவு பெற்றுக் கொள்ளப்பட்டால் மட்டுமே இந்தத் தரவுகள் வெளியிடப்படும் என பேஸ்புக் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர் பேஸ்புக் இணையத்தளத்தினூடாக மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் தொடர்பிலான தரவுகளை வழங்குமாறு ஸ்ரீலங்கா கம்பியூட்டர் எமர்ஜென்சி ரெஸ்பொன்ஸ் டீம் கோரிக்கை விடுத்திருந்தது.

பேஸ்புக் இணையத்தை பயன்படுத்தி குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பிலான தகவல்கள் திரட்டப்பட்டுள்ள போதிலும் அவற்றை வெளியிடுவதற்கு நீதிமன்றின் உத்தரவு அவசியம் என ஸ்ரீலங்கா கம்பியூட்டர் எமர்ஜென்சி ரெஸ்பொன்ஸ் டீயின் தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரொஹன பல்லியகுறு தெரிவித்துள்ளார்.

தகவல்கள் களவாடப்பட்டதாகவும், அச்சுறுத்தப்பட்டதாகவும், கப்பம் கோரப்பட்டதாகவும் பலர் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட சில கணக்குகளை ஏற்கனவே முடக்கியுள்ளதாக பேஸ் நிர்வாகம் அறிவித்துள்ளது. குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி நீதிமன்றின் உத்தரவைப்பெற்றுக் கொள்ளுமாறு புலனாய்வுப் பிரிவினரிடம் கோரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளனர்.

# ஜேர்மனிய வாள் வீச்சுத் தமிழன் பிரான்ஸில் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

ஜேர்மனியில் இருந்து கடந்த மாத இறுதியில் தப்பிச் சென்ற வாள்வீச்சுக் கொலையாளியான இலங்கைத் தமிழ் இளைஞன் ஒருவர் (வயது-30) பிரான்ஸ் நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

Stuttgart நகரத்தில் அமைந்து இருக்கும் தேவாலயம் ஒன்றில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருவிழா ஒன்று இடம்பெற்றது.

அத்திருவிழாவில் வைத்து 43 வயதுடைய இலங்கைத் தமிழ் பெண் ஒருவர் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

மேலும் இலங்கைத் தமிழர்கள் மூவர் படுகாயம் அடைந்தனர். தாக்குதல் நடத்தியோர் தமிழ் இளைஞர்கள் ஆவர். இவர்களில் ஒருவரான தமிழ் இளைஞன் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டார்.

இவருக்கு மன நல வைத்தியம் வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. மன நல நிலையம் ஒன்றுக்கு சிகிச்சை பெற சென்று வந்த இவர் சுமார் ஒரு வாரத்துக்கு முன் மாயமாக மறைந்து போனார்.

இந்நிலையில் இவரைக் கண்டு பிடிக்க ஜேர்மன் பொலிஸார் பகீரத முயற்சிகளை எடுத்தனர். அயல் நாடுகளின் எல்லைக் காவல் படையினருக்கும் தகவல் வழங்கினர்.

இந்நிலையில் இளைஞன் பிரான்ஸ் நாட்டின் விசேட அதிரடிப் படை பொலிஸாரால் Strasbourg நகரத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

## இத்தாலிய வீதி விபத்தில் 4 இலங்கையர் காயம்


(கொழும்பு)

இத்தாலியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் இலங்கையர் நால்வர் காயம் அடைந்துள்ளனர்.

தலைநகர் ரோமாபுரியை நோக்கி சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்று இவர்களின் ஜீப் மீது மோதியது.

இவர்களது ஜீப் சாரதி படுகாயம் அடைந்துள்ளார்.

ஐவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.



அபிவிருத்தி, சுபீட்சம் மற்றும் இலங்கை நடனக் கலைஞர் என்ற தொனிப்பொருளில் புதிய நாணயத் தாள்களை இலங்கை மத்திய வங்கி நேற்று முன்தினம் வெளியிட்டது. அமைச்சர் சரத் அமுனுகமவிடம் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட கப்ரால் புதிய நாணயத் தாளை கையளிப்பதை காணலாம்.

# விருப்பு இலக்கத்துக்குரிய சுவரொட்டிகளை அகற்றுமாறு பொலிஸாருக்கு உத்தரவு

(கொழும்பு)

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் அபேட்சகர்களின் விருப்பு இலக்க சுவரொட்டிகளை அகற்றுமாறு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவோர் தமது வீடுகளிலும் மற்றும் தமது கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் தலைமை அலுவலகத்திலும் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் சுவரொட்டிகள், கட்டவுட் அல்லது விருப்பு வாக்கு இலக்கத்தை காட்சிப்படுத்தல் தடை செய்யப்பட்டுள்ள மையால் தேர்தல்கள் ஆணையாளர் பொலிஸாருக்கு இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

அபேட்சகர்கள் தமது வீட்டில் மாத்திரம் தமது விருப்பு வாக்கு இலக்கம் அடங்கிய சுவரொட்டிகள், கட்டவுட், பதாகை, என்பவற்றினை காட்சிப்படுத்த முடியுமெனவும், அதற்கு வெளியே எந்த இடத்திலும் அவ்வாறு விருப்பு வாக்கு இலக்கங்களை காட்சிப்படுத்த முடியாதெனவும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தல் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது.

ஒரு கட்சிக்கு அல்லது சுயாதீனக் குழுவுக்கு ஒரு உள்ளூராட்சி நிறுவனத்திற்காக தேர்தல் அலுவலகம் ஒன்றினை மாத்திரம் வைத்திருக்க முடியுமெனவும் தேர்தல்கள் செயலகம் மேலும் குறிப்பிடுகின்றது.

# மீளக்கட்டியெழுப்ப ஜனாதிபதி செயலணி

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை மீண்டும் கட்டியெழுப்ப ஜனாதிபதி செயலணி படையை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கூடியபோதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கடும் மழையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி செயலணிப்படை நிறுவப்படவுள்ளது.

இந்த செயலணியை விரைவில் அமைத்து செயற்படுத்தவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் சட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

# இலங்கைத் தமிழருக்கு 39 மாத கடூழியச்சிறை

(கொழும்பு)

மன நலம் பாதிக்கப்பட்டு இருக்கும் 11 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த இலங்கைத் தமிழர் ஒருவருக்கு சுவிற்சர்லாந்து நீதிமன்றம் ஒன்று 39 மாத கடூழிய சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. குற்றவாளிக்கு வயது 40.

கடந்த 20 வருடங்களாக சுவிஸில் வசிக்கின்றார். சிறுமி இவருக்கு மைத்துனி ஆவார்.

சிறுமியின் தாயாருடன் இவருக்கு ரொமான்ரிக் தொடர்பு இருந்து வந்தது. கடந்த வருடம் மார்ச் மாதத்துக்கும் ஏப்ரல் மாதத்துக்கும் இடையில் துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

# புலிகளை ஆதரிக்கமாட்டோம்

(கொழும்பு)

புலிகள் இயக்கத்தை அமெரிக்கா ஒரு போதும் ஆதரிக்காது என்று இலங்கைக்கான முன்னாள் அமெரிக்க தூதுவர் Teresita Schaffer தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிடம் இருந்து புலிகளுக்கு எந்தவொரு ஆதரவும் வழங்கப்பட மாட்டாது. நாட்டில் அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற தேசிய நல்லிணக்க முயற்சிகள் பெரும் மகிழ்ச்சி தருகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

## விடைபெற்றார் சௌரவ் கங்குலி



(கொல்கத்தா)

அனைத்து வகை கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெறுவதாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி அறிவித்துள்ளார்.

இந்திய தேசிய அணியிலிருந்து ஓய்வு பெற்ற கங்குலி, ஐ.பி.எல். மற்றும் கொல்கத்தா அணி சார்பாக விளையாடி வந்தார்.

கடந்த மூன்று ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்று வந்த அவரை, நான்காவது ஐ.பி.எல். ஏலத்தின் போது எந்த அணியும் ஏலம் எடுக்கவில்லை. கடந்த ஐந்தாம் திகதி நடைபெற்ற அனைத்து அணிகளுக்குமான கூட்டத்திலும் கொச்சி அணி அவரை ஏலம் எடுக்க முயற்சித்த போதும் ஏனைய அணிகள் எதிர்ப்புத் தெரிவித்தமையால், அந்த வாய்ப்பும் நழுவியது.

இந்நிலையிலேயே அவர் அனைத்து வகை கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். அவரின் இந்த முடிவு கொல்கத்தா ரசிகர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.




# சூதாட்டத்தை ஒழிப்பதற்கு நடவடிக்கை வேண்டுமாம்


(அபுதாபி)

இந்தியாவில் சூதாட்டத்தை இல்லா தொழிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைமை செயல் அதிகாரி ஹாரூன் லொர்கட் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

விளையாட்டில் சூதாட்டம் இருப்பதை இந்தியாவில் ஒழுங்குபடுத்தாமல் இருப்பதை விட ஒழுங்குபடுத்துவது தான் சிறந்ததாகும் என்பதில் எனக்கு கருத்து வேறுபாடு கிடையாது. கிரிக்கெட் சூதாட்டத்தை சீர்படுத்த நாங்கள் பல்வேறு இடங்களில் விசாரணை நடத்தி முயற்சி எடுத்து வருகிறோம். இந்த உலகக் கிண்ணப் போட்டியில் சூதாட்டம் இருக்காது என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இப்போதுள்ள வீரர்களில் பெரும்பாலானவர்கள் நேர்மையானவர்கள். நாட்டு உணர்வுடன் விளையாடி வருகிறார்கள். இந்த விவகாரத்தில் ஐ.சி.சி. விழிப்புணர்வுடன் செயல்பட்டு வருகிறது. எனவே உலக கிண்ணப் போட்டித் தொடரில் சூதாட்டம் நடக்க வாய்ப்பில்லை என்றார்.

International Cricket Council



ஸ்பெயின் ரென்னிஸ் வீரர் ரபெல் நடாலுக்கு இந்த வருடத்திற்கான சிறந்த விளையாட்டு வீரருக்கான சர்வதேச விருது கடந்த முதலாம் திகதி அபுதாபியில் வழங்கப்பட்டது.

# புதிய பயிற்சியாளர் நியமனம் முன்னேற்றம் கண்ட ஆட்டம்



(பெல்கிறேட்)

புதிய பயிற்சியாளர் வந்த பின்னர் எனது ஆட்டத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் கிடைத்த ஓய்வுக்குப் பிறகு, மீண்டும் சாதிக்க முயற்சிப்பேன் என செர்பியாவின் நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனை அனா இவானோவிச் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

விம்பிள்டனில் பாதியில் வெளியேறியது மிகுந்த ஏமாற்றமான முடிவு. அடுத்தடுத்து போட்டிகளில் விளையாட வேண்டிய நிலையில் காயம் பெரிதும் வேதனைப்படுத்தியது. அன்று மிகுந்த வலி இருந்ததால் தொடர்ந்து விளையாட முடியாமல் வெளியேறினேன். இந்த காயம் இவ்வளவு இடைஞ்சல் தரும் என நினைவில்லை. ஆனால் பெரிய அளவில் காயம் இல்லை. சதையில் சிறிய அளவில் மட்டும் கிழிசல் இருந்தது ஓரளவு நிம்மதியாக இருந்தது. வீனஸ் வில்லியம்ஸ் திறமையைப் பாராட்டு கிறேன். புல்தரையில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தக்கூடியவர். பந்து செல்லும் திசையில் சென்று அதிக ஆற்றலுடன் திருப்பி அனுப்புவார்.

விம்பிள்டனில் இம்முறை சமந்தா ஸ்டோசுருக்கு எதிரான எனது ஆட்டம், இந்த ஆண்டின் மறக்க முடியாத போட்டியாகும். புதிய பயிற்சியாளர் வந்த பின்னர் எனது ஆட்டத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் கிடைத்த ஓய்வுக்குப் பிறகு, மீண்டும் சாதிக்க முயற்சிப்பேன் என்றார்.

# இறுதிப் போட்டிக்குச் செல்லவேண்டும் தென்னாபிரிக்காவின் கனவு இதுவாகும்

(டர்பன்)



உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்குள் நுழைய வேண்டும் என்பதே எங்கள் இலக்காகும் என தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த முறையை விட இந்த உலகக் கிண்ணப் போட்டித் தொடருக்கு தென்னாபிரிக்க அணி சிறப்பாகத் தயாராகி இருக்கிறது. 2007 இல் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் நாங்கள் கிண்ணத்தை வெல்வோம் என்ற எதிர்பார்ப்பு நிலவியதால் எங்களுக்கு அளவுக்கு அதிகமாக நெருக்கடி ஏற்பட்டது. உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பது எங்களது விருப்பமாகும். அது தான் எங்கள் மனதில் உள்ளது. அப்படி இல்லாவிட்டால் போட்டிக்குச் செல்வதில் அர்த்தம் இல்லையே?.

இந்த முறை நாங்கள் கடந்த முறை போல் அல்லாமல் மிகவும் நெருக்கடி இல்லாமல் செயற்பட வேண்டும் என்று விரும்புகிறோம். படிப்படியாக முன்னேற முயற்சி செய்வோம். இறுதிப் போட்டிக்குள் நுழைய வேண்டும் என்பது எங்கள் இலக்காகும். கடந்த முறை நாங்கள் இறுக்கமான மனநிலையுடன் செயற்பட்டோம். ஆனால் இந்த முறை அப்படி இருக்காது. கடந்த முறை ஒரே மாதியான வீரர்கள் அதிகம் இருந்தோம். கடந்த முறையை விட அனுபவம் வாய்ந்த வீரர்கள் குறைவு என்றாலும், இந்த முறை பல்வேறு விதமான திறமை கொண்ட வீரர்கள் அணியில் இடம் பெற்றுள்ளனர். சுழற்பந்து வீச்சில் கூட சிறந்த வீரர்கள் உள்ளனர். இதனால் வீரர்களைப் பயன்படுத்துவதில் நிறைய வாய்ப்புகள் இருக்கிறது என்றார்.


# ஐந்தாவது முறையாக கிண்ணத்தை வெல்வதற்கு அவுஸ்ரேலியா தயார்

(பேர்த்)

உலகக் கிண்ணத் தொடரில் ஐந்தாவது முறையாக கிண்ணத்தை வெல்லத் தயாராகிவிட்டோம் என்று அவுஸ்ரேலிய அணியின் பயிற்சியாளர் டிம் நீல்சன் தெரிவித்தார்.

பேர்த்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: உலகக் கிண்ணப் போட்டிக்காக அவுஸ்ரேலியா சிறப்பாகத் தயாராகிவிட்டது. தொடர்ந்தும் நான்காவது முறையாகவும், ஒட்டுமொத்தமாக ஐந்தாவது முறையாகவும் அவுஸ்ரேலிய அணி கிண்ணத்தை வெல்லும். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இங்கிலாந்து அணிக்கு எதிராகப் பெற்ற வெற்றிகள் அணி வீரர்களுக்கு மிகுந்த நம்பிக்கையை அளித்துள்ளது. அதே உத்வேகத்துடன் உலகக் கிண்ணத் தொடரிலும் அவர்கள் களம் இறங்குவார்கள். துடுப்பாட்டம், பந்து வீச்சு,



களத்தடுப்பு என எல்லாவிதத்திலும் அணி சிறப்பாகவுள்ளது.

காயமடைந்திருந்த தலைவர் பொண்டிங், மைக் ஹசி, நதன் ஹோரிட்ஸ் ஆகியோர் முழுமையாகக் குணமடைந்துள்ளனர். இது அணிக்கு கூடுதல் பலம் என்றார். இதற்கு முன் 1987, 1999, 2003, 2007 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணத்தை அவுஸ்ரேலிய அணி வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரவீன்குமாருக்கு பதில் ஸ்ரீசாந்த் தெரிவு

(புதுடில்லி)

உலகக் கிண்ண 15 பேர் கொண்ட இந்திய அணியில் காயம் காரணமாக விலகிய பிரவீன்குமாருக்குப் பதிலாக ஸ்ரீசாந்த் தெரிவாகியுள்ளார்.

பீரவீன்குமார் விலகியதன் காரணமாக, இசாந் சர்மா, ஸ்ரீசாந்த் ஆகிய இருவரில் ஒருவருக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஸ்ரீசாந்துக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

15 பேர் கொண்ட இந்திய அணியில் இடம்கிடைக்காமையால் பெரும் கவலையில் இருந்த ஸ்ரீசாந்துக்கு இது அதைப் போக்கும் வகையில் இந்த வாய்ப்பு அமைந்ததாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றன.

# சர்வதேச மாநகர கபடிப் போட்டி கிழக்கு மாகாண அணிக்கு வாய்ப்பு

(மட்டக்களப்பு)

சர்வதேச மாநகரங்களுக்கிடையிலான கபடிச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை கிழக்கு மாகாண கபடி அணி பெற்றுள்ளது.

இக் கபடிப் போட்டி வரும் 16ஆம் திகதி மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாண சுகாதார விளையாட்டுத்துறை அமைச்சர் எம்.எஸ். சுபைர் தலைமையில் பயணமாகவுள்ள கபடிக் குழுவில் 12 வீரர்கள் இடம்பெறுகின்றனர்.

இக்குழுவில் கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளர் எம். ஏ. ஜஸ்ரின் பெரேரோ, திருகோணமலை மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ.எச். விமலசேன மற்றும் அமைச்சின் பிரத்தியேக செயலாளர் எம்.எஸ். தௌபீக் ஆகியோரும் செல்லவுள்ளனர்.

கோலாலம்பூர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்தச் சுற்றுப் போட்டியில் ஐந்து நாடுகளைச் சேர்ந்த 18 நகர அணிகள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்ரேலிய சுழற்பந்துக்கு பயிற்சிக்கு செல்கிறார் முரளி!

(சிட்னி)



இலங்கையின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், எதிர்கால அவுஸ்ரேலிய இளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்குப் பயற்சியளிக்கவுள்ளாரென டெய்லி டெலிகிராவ் ஊடகம் தெரிவித்தது.

எதிர்வரும் யூன் மாதம் பிரிஸ்பேனிலுள்ள கிரிக்கெட் பயிற்சி நிலையத்தில் முரளிதரன் அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவுள்ளாரென அவுஸ்ரேலிய கிரிக்கெட் தெரிவுக் குழுவின் உறுப்பினர் கிரேச் செப்பல் தெரிவித்தார்.

பத்தாவது உலகக் கிண்ணத் தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து முரளிதரன் ஓய்வுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாளையதினம் உதயமாகவுள்ள தெற்கு சூடான் எனும் தனிநாடு



(கார்டோம்)

ஆபிரிக்க நாடான சூடான், தெற்கு,வடக்கு என இரண்டாகப பிரிக்கப்படவுள்ளது. இதற்கான மக்கள் வாக்கெடுப்பு கடந்த சில நாட்களுக்கு முன் நடந்து முடிந்தது. இதன்படி தெற்கு மற்றும் வடக்கு சூடான் என இரண்டாகப் பிரிக்க நடந்த வாக்கெடுப்பில் 98.83 சதவீத மக்கள் நாடு இரண்டாகப் பிரிக்கப்படுவதை ஆதரித்து வாக்களித்தனர். 1.17 சதவீதம் பேர் நாடு பிரிக்கப்படுவதை எதிர்த்து வாக்களித்தனர். வாக்கெடுப்பினை அந்நாட்டு தேர்தல் திணைக்கள ஆணையாளர் இப்ராஹிம் வெற்றிகரமாக நடத்தினார். இந்நிலையில் இறுதி முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், தெற்கு சூடான் தனிக் குடியரசாக அந்நாட்டு அதிபர் ஒமர் அல்-பீர் ஒப்புதல் அளித்து இதற்கான வரையறை ஆவணத்தில் கையெழுத்திட்டார். முன்னதாக சூடானின் துணை அதிபர் அலி ஒஸ்மான் கூறுகையில், தெற்கு சூடான் தனி நாடு உருவாக்கப்படுவதை மக்கள் தீர்மானித்துள்ளனர். இதனால் நாடு பிரிக்கப்படுவது தவிர்க்கமுடியாதது என்றார். நாளையதினம் தெற்கு சூடான் எனும் தனி குடியரசு நாடு உதயமாகவுள்ளது. இந்நிலையில் சூடான் பிரிக்கப்படுவதற்கு அமெரிக்கா வரவேற்பு அளித்துள்ளது.

# எகிப்திய ஜனாதிபதிக்கெதிரான போராட்டம் தொடருமென அறிவிப்பு



(கெய்ரோ)

எகிப்திய ஜனாதிபதி முபாரக் பதவிவிலகும் வரை தமது போராட்டம் நிறுத்தப்படமாட்டாதென அந்நாட்டு மக்கள் தெரிவித்ததுடன் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த முப்பது வருடங்களுக்குமேலாக எகிப்தில் பதவியிலிருக்கும் ஜனாதிபதி முபாரக் உடனடியாகப் பதவி விலக வேண்டுமெனக்கோரி அந்நாட்டு மக்கள் கடந்த இரண்டு வாரகாலமாக எதிர்ப்புப போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் 200பேர் வரைபலியாகி உள்ளனர்.

இந்த நிலையில் எதிர்வரும் செப்ரம்பர் மாதம் நடைபெறும் தேர்தலுக்குப் பின்னரே பதவி விலகவுள்ளதாக ஜனாதிபதி முபாரக் தெரிவித்துள்ளார்.

மக்களின் போராட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில் துணை ஜனாதிபதி ஒமர் சுலைமான் எதிர்க்கட்சியினருடன் நடத்திய பேச்சில் அரசியல் சட்டத்தில் மறுசீரமைப்பு செய்வதென தீர்மானிக்கப்பட்டது. இதனால் மக்களின் போராட்டம் மந்தநிலையை அடைந்தது.

எனினும் ஜனாதிபதி முபாரக்கை நம்ப முடியாததெனத் தெரிவித்துள்ள மக்கள் அவர் பதவி விலகும்வரை தமது போராட்டத்தை நடத்தப் போவதாகத் தெரிவித்துள்ளனர். அங்குள்ள தஹ்றீர் சதுக்கத்தில் மக்கள் தொடர்ந்து போராட்டத்தை நடத்திவரும் வேளை படையினர் அவர்களை வெளியேற்ற எடுத்த முயற்சியும் தோல்வியடைந்துள்ளது.

இதனிடையே வெளிநாடுகளில் வாழும் எகிப்தியர்களும் போராட்டத்தில் ஈடுபடுவதற்காகஎகிப்துக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இதனிடையே எகிப்தில் நடைபெறும் உள்நாட்டுக் கலவரத்தை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு வெளிநாட்டு தூதுவர்கள் ஆயுதங்கள், தொலைத் தொடர்பு சாதனங்களைக் கொண்டு வருவதாக எகிப்து வெளியுறவு அமைச்சகம் குற்றம் சாட்டியுள்ளது.

இவ்விதம் ஆயுதங்கள், தொலைத் தொடர்பு சாதனங்களை எகிப்திற்குள் கொண்டு வந்தது எந்த நாட்டு தூதரக அதிகாரிகள் என்பதை வெளியுறவு அமைச்சகம் வெளியிடவில்லை.




# கலைகளின் காவலன் மெற்றாஸ்மயில்



தமிழ்க் கலைகளின் தனிக் காவலனாகத் திகழ்ந்த மெற்றாஸ் மயில் மறைந்து இன்று ஓராண்டு பூர்த்தியாகின்றது. இவரது அளப்பரிய சேவையால்தான் பாரம்பரிய கலைகள்யாவும் பாதுகாக்கப் பட்டன என்று கூறினால் அது சாலப் பொருந்தும். தம்முடைய வாழ்க்கையையே கலைகக்காக அர்ப்பணித்த அமரர் மெற்றாஸ் மயில் ஒரு தலைசிறந்த நாடக நடிகராவார்.

மரபுக் கலைக் காவலன் என்று கூறுமளவுக்குக் கலைப் பணியாற்றியவர் இவர். பாரம்பரியக் கலைகள் வளர்க்கும் பல கலைஞர்களை இனங்கண்டு அவர்களுக்கு உரிய கௌரவம் கொடுத்து வெளிக்கொணர்ந்து சிறப்பித்த பெருமை இவரையே சாரும். அத்துடன் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் கலையம்சம் மிகுந்த கலை நாடகங்களை மேடையேற்றிப் பாடுபட்ட இவர் ஒரு தலைசிறந்த புவியியற் பட்டதாரியுமாவார்.

இவருடைய கலைப்பணியைப் பாராட்டி தங்கக் கிரீடம் சூட்டி பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். இவர் சத்தியவான் சாவித்திரி,அரிச்சந்திரன் மயான காண்டம்,வள்ளி திருமணம்,கோவலன் கண்ணகி, பவளக்கொடி முதலிய நாடகங்களை நெறியாள்கை செய்ததோடல்லாமல் தானே நடித்தும் பேரும்புகழும் ஈட்டியுள்ளார்.


இவரது நடிப்பாற்றலால் பலமுறை மேடையேறிய 'வேழம் படுத்த வீராங்கனை' நாடகம் பலரது பாராட்டுக்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. கல்வித் திணைக்களத்தில் பதவிநிலை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவர் ஈழத்தின் பல இடங்களிலும் சமூகசேவை செய்தும் கலைப்பணியாற்றியும் கலைஞர்களைக் கௌரவித்தும் வந்தார். அத்துடன் மூத்த கலைஞர் வரலாறு,ஆனையை அடக்கிய அரியாத்தை, மண்வாசனையில் மூன்று நாடகங்கள்,மரபுவழி இசை நாடகங்கள் முதலாய நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கின்றார். இவர் ஒரு நாட்டுக் கூத்துக் கலைஞனாகவும் இசை நாடக எழுத்தாளராகவும் நாட்டார் இசைப்பாடகனாகவும் கிராமியக் கலை ஆடல் வல்லோனாகவும் கூத்து நாடகத் தயாரிப்பாளராகவும் கூத்தின் அண்ணாவியாராகவும் விளங்கி கலைச் சேவையாற்றியுள்ளார் என்று கூறினால் மிகையாகாது. கலைக்காகவே வாழ்ந்து மறைந்த இவரது இழப்பு நாடக உலகக்குப் பேரிழப்பாகும். கலை உலகமே கண்ணீர் சிந்தி நிற்கிறது. பாரம்பரிய கலைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று ஒலி நாடாக்களையும் ஒலி இறுவட்டுக்களையும் கூட வெளியிட்ட இவர் எமது யாழ்.மாவட்டத்துக்கே பெருமை சேர்த்த ஒரு தனிப்பெருங் கலைஞராவார்.

இவர் கலைக்காக ஆற்றிய பணிகளைத் தொடர்ந்து நாமும் செய்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப் போமாக.

மரபுக் கலைச் சுடர்
இராசையா ஸ்ரீதரன்

# ரஷ்ய விமானநிலையத் தாக்குதல் தனது உத்தரவுப்படியே நடந்ததாம்

## ரஷ்யாவால் தேடப்படும் உமரோவ் தெரிவிப்பு



(மொஸ்கோ)

ரஷ்ய விமான நிலையத்தில் கடந்த மாதம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் தனது உத்தரவுப்படியே நடத்தப்பட்டதாக ரஷ்ய அரசினால், தீவிரமாகத் தேடப்பட்டுவருபவரான உமரோவ் தெரிவித்தார்.

வீடியோ ஒளிநாடா வொன்றில் தோன்றிய அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த விசேட தாக்குதல் நடவடிக்கை எனது உத்தரவுக்கமையவே நடத்தப்பட்டது. இவ்வாறான தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்படும். உலகிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் முஸ்லிம்கள் தாக்கப்படுகின்றனர். சூடானில் முஸ்லிம்களின் நிலை மோசமாக உள்ளது. இதனால் கிறிஸ்தவத்தை அடிப்படையாகக் கொண்ட அமெரிக்காவும், இஸ்ரேலுமே காரணமாகும். உலகத்தில் அல்லாவின் ஆட்சியை நிலைநாட்டி எனது நூற்றுக் கணக்கான சகோதரர்கள்,தமது உயிரைத் தியாகம் செய்வதற்குத் தயாராக உள்ளனர்.

எனவே ரஷ்ய விமான நிலையத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் போல மேலும் பல தாக்குதல்கள் நடத்தப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்தமாதம் 24ஆம் திகதி ரஷ்ய விமான நிலையத்தில் நடத்தப்பட்டதாக்குதலில் 36 பேர் உயிரிழந்ததுடன் மேலும் 180 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெனாசிர் பூட்டோ கொலை வழக்கில் தலைமறைவான குற்றவாளி முஷாரப்



(இஸ்லாமாபாத்)

கடந்த 2007இல் நடந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கொலை வழக்கில், அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பை தலை மறைவான குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என நீதிமன்றில் அரசு தரப்பு கோரியுள்ளது.

பாகிஸ்தான் ராவல்பிண்டி நகரில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றில் பெனாசிர் பூட்டோ கொலை வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வழக்கில் நேற்று முன் தினம் அந்நாட்டு புலனாய்வு துறையால் இடைக் கால குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அதில் கூறியிருப்பதாவது: பூட்டோ கொலை நடந்த போது அதிபராக இருந்த முஷாரப் விசாரணைக்கு போதிய ஒத்துழைப்பு தர மறுக்கிறார். இவ்வழக்கில் பூட்டோவுக்கு போதிய பாதுகாப்பு அளிக்காத காரணத்திற்காக கைது செய்யப்பட்டுள்ள ராவல்பிண்டி நகர முன்னாள் பொலிஸ் தலைவர் சவுத் அஜீஸ் மற்றும் முன்னாள் சூப்பிரின்டெண்டென்ட் குர்ரம் ஷாஜத் இருவரும முஷாரப்பின் உத்தரவுப்படி செயல்பட்டுள்ளனர். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வுத்துறை வக்கீல் சவுத்ரி ஜுல்பிகர், முஷாரப் விசாரணைக்கு ஒத்துழைக்க மறுப்பதால் அவரைத் தலை மறைவான குற்றவாளி என்று அறிவிக்க வேண்டும் என்று கோர்ட்டில் கேட்டுக் கொண்டார். இதுகுறித்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அவர், முஷாரப் ஒத்துழைக்க மறுத்தால்,அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# தூத்துக்குடி-கொழும்பு கப்பல் சேவை

# ஆய்வு நடத்தச் சென்ற அதிகாரிகள்குழு

(சென்னை)

**தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிப்பது குறித்த ஆய்வுக்காக, இலங்கை அதிகாரிகள் குழுவினர், தூத்துக்குடி துறைமுகம் சென்றுள்ளனர்.**

இந்தப் பயணிகள் கப்பல் போக்குவரத்திற்காக, இருநாடுகளிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட பின், இதற்கான பணிகள் வேகமாக நடந்து வருகின்றன. தூத்துக்குடித் துறைமுகத்தில், 2.25 கோடி ரூபாவில் பல்வேறு வசதிகளுடன் கூடிய, பயணிகள் துறைமுகம் திறக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தூத்துக்குடித் துறைமுகத்தலைவர் சுப்பையா மற்றும் இந்திய அரசு அதிகாரிகள், கடந்த மாதம் கொழும்பு சென்று, அங்குள்ள துறைமுகத்தில் பயணிகள் கப்பலை இயக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள வசதிகள் குறித்து ஆய்வு செய்தனர்.

இதன் தொடர்ச்சியாக, இலங்கை அரசின் துறைமுகம் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சக மேலதிக செயலர் ஜயவிக்கிரம தலைமையில், அந்நாட்டு அரசு அதிகாரிகள் ஒன்பது பேர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தூத்துக்குடித் துறைமுகம் சென்றனர். கப்பல் போக்குவரத்திற்காக, துறைமுகத்தில் மேம்படுத்தப்பட்டுள்ள பயணிகள் துறைமுகம், அதிலுள்ள நவீன தொலைத் தொடர்பு வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்து, துறைமுகத் தலைவர் சுப்பையா மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

ஆய்வை முடித்து, அந்நாட்டு அரசிடம் அறிக்கையைச் சமர்ப்பித்த பின், பயணிகள் கப்பல் போக்குவரத்து மார்ச் முதல் வாரத்தில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நண்பனைக் கொலை செய்த இலங்கை இளைஞர் கைது

(ராமேஸ்வரம்)

நண்பனைக் கொலை செய்து விட்டுத் தப்பியோடி வந்த சிங்கள இளைஞனை ராமேஸ்வரப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இலங்கையைச் சேர்ந்த கமல் சஞ் சுவா (வயது-22) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

நண்பனைக் கொலை செய்த அவர், இலங்கையிலிருந்து ராமேஸ்வரத்திற்குத் தப்பிச் சென்றுள்ளார். அவரை 'கியூ' பிரிவுப் பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




## காங்கிரஸ் கட்சிக்கு எப்பொழுதும் வசந்தகாலம் என்கிறார் சிதம்பரம்



(சென்னை)

காங்கிரசுக்கு வருபவர்கள்தான் முக்கியம். ஒருவர் இடத்தைக் காலி செய்தால் 2 இளைஞர்கள் வருவார்கள். 125 வயதான காங்கிரசுக்கு என்றும் வசந்தகாலம்தான் என, மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் பேசினார். புதுவையில் நடந்த நிகழ்வில் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு தி.மு.க.வின் துணையோடு காங்கிரஸ் புதுவையில் ஆட்சிக்கு வந்தது. இன்னும் 20 நாட்களில் தேர்தல் அறிவிக்கப்பட உள்ளது. இந்த நேரத்தில் காங்கிரஸ் என்ன சொல்லப் போகிறது என்பதைக் கூட்டணிக் கட்சியினர், பொதுமக்கள், ஏன் எதிர்கட்சிகள் கூட எதிர்பார்க்கிறார்கள். பாரதிய ஜனதாக்கட்சியைச் சேர்ந்த சுஷமாசுவராஜ் புதுவைக்கு வந்து குறைகூறிச் சென்றுள்ளார். பாரதிய ஜனதா ஆட்சிக்காலத்தில் பெயர் செலலும் படியாக ஒரு திட்டமாவது நிறைவேற்றப்பட்டதா? அதேநேரத்தில் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் ஊரக வேலை உறுதித்திட்டம், விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி, மாணவர்களுக்கு கல்விக் கடன் என எண்ணற்ற பல திட்டங்களை அளித்துள்ளோம்.

சுஷ்மா சுவராஜ் தமிழகம் புதுவையில் தனித்து போட்டியிடப்போவதாகக் கூறியுள்ளார். அவர்கள் தனித்துப் போட்டியிட வாழ்த்துகிறேன். அப்படிச் செய்தால் தான் பூஜ்யம் என்ற எண்ணின் மதிப்பு அவர்களுக்குத் தெரியும் என்றார்.

### தமிழக மீனவரின் தாக்குதலைத் தடுக்க

## இலங்கை-இந்திய கடற்படைகள் கூட்டு ரோந்தில் ஈடுபடவேண்டும்!




(சென்னை)

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதைத் தடுக்க இரு நாட்டுக் கடற்படைகளும் கூட்டு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று காங்கிரஸ் எம்.எல்.ஏ. பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்தார்.


தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் மீதான பொது விவாதத்தில் பங்கேற்று அவர் பேசும்போது:

இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்கு 378 தமிழக மீனவர்கள் பலியாகியுள்ளனர். இலங்கையில் போர் நடைபெற்றபோது, அதைக் காரணம் காட்டி, தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு வந்தது. இலங்கையில் போர் நின்றுவிட்டது. இப்போதும் மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதை எந்தத் தமிழனும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதைத் தடுக்க, கச்சதீவு அருகே சர்வதேச கடல் எல்லையில் இந்திய, இலங்கைக் கடற்படைகள் கூட்டு ரோந்தில் ஈடுபட வேண்டும் எனத் தெரிவித்தார்.



தமிழகத்தில் பாலின் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி பால் உற்பத்தியாளர்கள் தமது மாடுகளுடன் வீதிக்குக் குறுக்கே அமர்ந்திருந்து போராட்டத்தில் ஈடுபட்டதனைக் காணலாம்.

## இஸ்ரோ அலை ஒதுக்கீட்டிலும் இரண்டு இலட்சம் கோடி இழப்பு



(புதுடில்லி)

மத்திய விண்வெளி ஆராய்சசித்துறையான இஸ்ரோவிலும் இரண்டு லட்சம் கோடி ரூபா இழப்பு நடந்திருப்பதை மத்திய தணிக்கைத்துறை கண்டுபிடித்துள்ளது. தொலைத் தொடர்புத் துறை போலவே இஸ்ரோவிலும் அலைவரிசை ஒதுக்கீடுகள் நடக்கின்றன. இஸ்ரோ அனுப்பும் செயற்கைக் கோள்களில் உள்ள அலைவரிசைகளைத் தனியார் நிறுவனங்களுக்கு விற்கின்றன.

பல நாடுகளில் இது போன்ற அலைவரிசைகளைப் பொது ஏலம் மூலமே விற்கின்றனர். ஆனால், இஸ்ரோ மட்டும் பொது ஏலத்துக்கு விடாமல் இழப்பை ஏற்படுத்தியிருப்பதாகத் தணிக்கைத்துறை கூறியுள்ளது. இஸ்ரோ நிறுவனம் மத்திய அரசின் விண்வெளி ஆராய்ச்சித்துறையின் கீழ் செயற்படுகிறது.

இந்தத் துறை பிரதமர் மன்மோகன்சிங்கிடம் உள்ளது. அப்படியிருந்தும் இரண்டு லட்சம் கோடி ரூபா இழப்பு ஏற்படுத்தியிருப்பது எல்லோரையும் ஆச்சரியமடையச் செய்துள்ளது. இதில் ஊழல் ஏதும் நடந்திருக்குமா? என்று தெரியவில்லை.

2-ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு பிரச்சினை போல இஸ்ரோ அலைவரிசை ஒதுக்கீட்டுப் பிரச்சினையும் பெரியளவில் வெடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மனிதர்களை நேசிப்பது தான் முக்கியமானது என்கிறார் கமல்



(கொல்கத்தா)

வாக்குகளைச் சேகரிப்பதனை விடவும், மனிதர்களைச் சேகரிப்பதுதான் முக்கியமென நடிகர் கமலஹாசன் தெரிவித்தார்.

அகில இந்திய கமலஹாசன் நற்பணி இயக்கம் சார்பில் புதிதாக இளைஞர் அமைப்புத் தொடங்கப்பட்டிருந்தது. இதன் தொடக்க விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை ஆழ்வார்பேட்டை மகாராஷ்டிரா நிவாஸ் திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:

பாகிஸ்தானில் ஒரு லீட்டர் பெற்றோல் 18 ரூபாவிற்கு விற்கப்படுகிறது. எமது நாட்டில் பெற்றோல் விலை 64 ரூபா ஆகும். பெற்றோல் விலையைக் குறைக்க அரசியல் கட்சிகள் என்ன முயற்சி எடுக்கின்றன என்பதை விட நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதுதான் முக்கியம்.

அரசியல் அமைப்புகளைவிட தனி மனிதர்களுக்கு அதிக பலம் இருக்கிறது. நாம் எல்லோரும் ஒரு நாள் பெற்றோல் வாங்காவிட்டால் பிரச்சினை சரியாகிவிடும். அதற்காக பெற்றோல் நிலைய உரிமையாளர்களுக்கு நான் எதிரி அல்ல. நாம் இதுபோன்ற பணிகளைச் செய்தால் போதும். அதற்கு மேல் போகத்தேவையில்லை. நாம் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களும் இல்லை.

எம்மால் முடிந்த செயல்களைச் செய்ய வேண்டும். மற்றவர்களைக் குறை சொல்லக்கூடியவர்கள் அல்ல நாம்.

எதையும் பகுத்தறிந்து, பெரியவர்களின் அறிவுரையைக் கேட்டு நாட்டுக்குப் பயன்படக் கூடிய வகையில் நடந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

### முதல்வர் மாயாவதியின் பாதணியில் தூசி துடைக்கும் மெய்ப்பாதுகாவலர்



(அவுரியா)

உத்தரப்பிரதேச மாநில முதல்வர் மாயாவதி சர்ச்சைகளில் சிக்குவதில் வல்லவர்.

பொதுக்கூட்டத்தில் பண மாலை, அரசாங்கப் பணத்தில் தனக்குத் தானே சிலைகள் என பெரிய சர்ச்சைப் பட்டியல் இருக்கிறது அவர் மீது. இந்த வரிசையில் அவர் தற்போது பொலிஸ் ஒருவரை கீழ்த்தரமாக நடத்திய விவகாரத்தில் சிக்கியுள்ளார். மாயாவதியின் மெய்க்காப்பாளர் ஒருவர், மாயாவதி அணிந்திருந்த பாதணியில் இருந்த தூசியைத் துடைக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

சீருடை அணிந்த ஒரு பொலிஸ், முதல்வர் காலில் இருக்கும் பாதணியின் தூசியைத் துடைக்கும் காட்சி அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. பொலிஸ் ஒருவர் தன் காலில் இருக்கும் பாதணியைச் சுத்தமாக்கிக் கொண்டிருக்க கடமையே கண்ணாக அதிகாரிகளுடன் பேசிக் கொண்டு நிற்கிறார் மாயாவதி.

# உணவுப் பொருட்களின் விலைகள் முல்லை மாவட்டத்தில் அதிகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள்,மரக்கறி வகைகள்,ஆகியவற்றின் விலை அதிகரித்துக் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

வெள்ளம் காரணமாக கொழும்பிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உணவுப் பொருட்களை ஏற்றிவரும் லொறிகளின் வரவில்லை. இதனால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விலையதிகரித்துக் காணப்பட்டன. எனினும் இருலொறிகளில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உணவுப் பொருட்கள் வந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

வெங்காயம்,கிழங்கு உட்பட மரக்கறிகளும் அரிசி,சீனி,மா போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களும் விலை அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதேவேளை, மழை காரணமாக கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 8,430 கால்நடைகள் உயிரிழந்திருப்பதாக கால்நடை வைத்திய திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாகவும் ஏ.பத்திநாதன் தெரிவித்தார். 1,746 மாடுகளும் 6,635 கோழிகளும் 49ஆடுகளும் உயிரிழந்துள்ளன. மாட்டுக்கன்றுகளே அதிகளவில் உயிரிழந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

6,200 ஏக்கர் நெற்செய்கையும் 1,120 ஏக்கர் மேட்டுநில பயிர்ச்செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய திணைக்களப் பிரதிப் பணிப்பாளர், உதவி ஆணையாளர், கமநல சேவைத்திணைக்கள அறிக்கைகள் தெரிவிப்பதாக அவர் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் வெள்ளப் பாதிப்பு ஆளுநருக்கு அவசர கடிதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மழை வெள்ளம் மற்றும் இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதினால் கண்டாவளை,கரைச்சி,உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 2780 வீடுகள் முழுமையாக நீரில் மூழ்கிச் சேதமடைந்துள்ளன.

3,781 குடும்பங்களைச் சேர்ந்த 14,827 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளர் திருமதி கீதாஞ்சலி நகுலேஸ்வரன் வடமாகாண ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ள அவசர கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு அவசர உதவிகள் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை,பரந்தனில் 371 குடும்பங்களைச் சேர்ந்த 1,676 பேரும் குமரபுரத்தில் 131 குடும்பங்களைச் சேர்ந்த 785 பேரும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த நிவாரண நிலையம் தெரிவித்தது.

# மே மாதம் வரையான காலப்பகுதியில் ஈரலிப்பான காலநிலை நீடிக்குமாம்

(கிளிநொச்சி)

உலக காலநிலை மாற்றங்கள் காரணமாக நாட்டில் முற்றிலும் வெயிலான காலநிலை ஏற்படுவதற்கு சில மாதகாலம் செல்லும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போதையலா நினா நிலைமையானது குறைந்தபட்சம் இன்னும் 2-4 மாதங்கள் நீடிக்கும் அதாவது ஏப்ரல் அல்லது மே முற்பகுதி வரை நீடிக்கும் எனத் தெரிவித்துள்ளது.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.எச்.காரியவசம் இது தொடர்பாகத் தெரிவிக்கையில், எதிர்வரும் நாட்களில் மழைவீழ்ச்சி குறையும் என எதிர்பார்க்கலாம் என்ற போதிலும் முற்றாக வெயிலான காலநிலையை எதிர்பார்க்க முடியாது எனக் கூறியுள்ளார்.

நாட்டின் வானிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் தாழமுக்கம் இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கும் என அவர் கூறினார்.

காற்றின் காரணமாக வெப்பநிலையில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# எரிபொருளின்விலை அதிகரித்தாலும் பஸ் கட்டணங்களில் அதிகரிப்பு இல்லை

(கொழும்பு)

எல்.ஐ.ஓ.சி நிறுவனத்தினால் அண்மையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்தது.

எனினும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருட்களின் விலையை அதிகரித்தால் பஸ் கட்டணங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் சசி வெலிகம தெரிவித்தார்.

அத்துடன் பஸ் கட்டணத்தில் மாற்றம் செய்வது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும் அவர் குறிபபிட்டார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருட்களின் விலையை அதிகரித்தால் எவ்வளவு ரூபாவால் பஸ் கட்டணத்தை அரிகரிக்க வேண்டும் என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டும் எனினும் இப்போதைக்குக் கட்டணம் எதுவும் அதிகரிக்கவில்லை என்றார் அவர்.

பொதுவாக ஒவ்வொரு வருடமும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் பஸ் கட்டணங்கள் மீளாய்வு செய்யப்படும்

உடனடியாகவா அல்லது ஜூன் மாதத்திலா பஸ் கட்டணங்கள் மீளாய்வு செய்யப்படும் என்று தீர்மானிப்பது கடினமாகும் என சசி வெலிகம மேலும் தெரிவித்தார்.

பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பான செயற்பாட்டை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்,திறைசேரி மற்றும் போக்குவரத்து அமைச்சு என்பன இணைந்து மேற்கொள்ளும்.

# 600 பேர் விலகினர்

(கொழும்பு )

அறிவித்தல் ஏதுமின்றி இராணுவத்தை விட்டு நீங்கிய இராணுவத்தினருக்கு சட்ட பூர்வமாக இராணுவத்திலிருந்து விலகுவதற்கு வழங்கப்பட்ட வாய்ப்பை 600 இராணுவத்தினர் பயன்படுத்தியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார்.

இந்த வாய்ப்பு எதிர்வரும் சனிக்கிழமை வரையுமே கிடைக்கும். எனவே அறிவித்தலின்றி இராணுவத்தை விட்டு விலகியவர்கள் இதைப் பயன்படுத்திக்கொள்வது நல்லதெனவும் அவர் கூறினார்.

இந்த வாய்ப்பு 63ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டத்தையொட்டி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# மேட்டுநிலப் பயிர்ச்செய்கை மன்னார் மாவட்டத்தில் அழிவு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல ஏக்கர் மேட்டு நிலப்பயிர்ச்செய்கை முற்றாக அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பயிரிடப்பட்ட கத்தரிக்காய்,மிளகாய், வெண்டிக்காய்,வெங்காயம் கறிமிளகாய், பயிற்றை உட்பட சகலவகையான மரக்கறி வகைகளும் பயிரிடப்பட்ட 1793 ஏக்கர் மேட்டு நிலப்பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

# உயர் தரத்திலான பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும்



(கொழும்பு)

நாட்டின் தலா வருமானத்தை இரண்டு மடங்காக அதிகரிக்க உயர்தரத்திலான பொருட்களை நாம் உற்பத்தி செய்ய வேண்டும் என சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவிற்கும் இலங்கை வந்துள்ள ஜப்பான் நாட்டின் பிட்ஸுமேய்கன் பல்கலைக்கழக கல்லூரி தூதுக்குழுவினருக்குமிடையிலான சந்திப்பையடுத்து இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

நல்ல பொருட்களை உற்பத்தி செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் போது நல்ல சந்தை வாய்ப்புக் கிடைக்கும் இதன் மூலம் நாட்டுக்கு நல்ல வருமானம் கிடைக்கும்.

இதனூடாக ஜனாதிபதி எதிர்பார்ப்பதைப் போன்று நாட்டை குறுகிய காலத்திற்குள் அபிவிருத்தியடையச் செய்ய முடியும்.

நவீன தரத்திலான பொருட்களை இலங்கையில் உற்பத்தி செய்வதற்கு ஜப்பான் போன்ற பல நாடுகள் முன் வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# பொலிஸாரும் அரசியலில் பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸார் அரசியலில் ஈடுபட்டு வருவதாக தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் குற்றம் சுமத்தியுள்ளன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வரும் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளின் சார்பில் கடமையாற்றி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

நாவலப்பிட்டியில் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ்வாறு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து தேர்தல் ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டார். இந்த நடவடிக்கையால் சில பிரதேசங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாகப்பெய்து வரும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் கோணாவிலிலிருந்து அக்கராயன் செல்லும் பிரதான பாதையை ஊடறுத்து வெள்ளம் பாய்வதைக் காணலாம் (29)

# நால்வர் கைது

(கிளிநொச்சி)

சுகததாஸ அரங்கில் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் மாநாடு குறித்த சுவரொட்டியை ஒட்டிக்கொண்டிருந்த மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்கள் நால்வர் மொரட்டுவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எந்தவித காரணமும் கூறாமல் கைதுசெய்யப்பட்டுள்ள இவர்கள் தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

# கட்சியிலிருந்து பியசேன நீக்கம்; அது சட்டவிரோதமானது

## கூட்டமைப்புக்கு புதிய தலையிடி

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவான, நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனவை கட்சியின் உறுப்பினர் நிலையிலிருந்து விலக்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த தீர்மானம் சட்ட விரோதமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரே நாடாளுமன்ற உறுப்பினரான பி.பியசேன தன்னை கட்சியிலிருந்து வெளியேற்றிமைக்கு எதிராக கடந்த டிசம்பர் மாதம் வழக்குத் தொடுத்திருந்தார். இது தொடர்பான விசாரணையை மேற்கொண்ட ஹலின் மர்சூக் தலைமையிலான உயர் நீதிமன்றத்தின் 3 நீதியரசர்கள் கொண்ட குழு நேற்றுக் காலை இத் தீர்ப்பை வழங்கியது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பி.பியசேன, 18 ஆவது அரசியல் யாப்பு மாற்றம் தொடர்பான வாக்களிப்பின் போது அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார். இதன் காரணமாக, தன்னை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியின் அடிப்படை உறுப்பினர் நிலையிலிருந்து நீக்குவதற்குத் தீர்மானித்ததாக பியசேன தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலக்கப்படுவதற்கு முன்னர், கட்சியினால் தனக்கு எதிராக எவ்விதமான ஒழுக்காற்று விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பியசேன தனது மனுவில் கூறியிருந்தார்.

இந்தக் கருத்துகளை பரிசீலித்த உயர் நீதிமன்றம், ஒழுக்காற்று நடவடிக்கை இன்றி கட்சியிலிருந்து விலக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது என அறிவித்துள்ளது.



இதன்படி பியசேனவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியிலிருந்து விலக்குவது என எடுத்த தீர்மானம் சட்டவிரோதமானது எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை கருத்தில் கொண்டு கட்சி ஒன்றுகூடி கலந்தாலோசித்து பியசேன குறித்து எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை குறித்து தீர்மானம் எடுக்கப்படுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

# அடைமழையினால் ஏற்பட்ட அவலம்; கிளிநொச்சியின் பிந்திய நிலை என்ன?

(கிளிநொச்சி)

அண்மையில் கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பாதிப்புக்களால் கிளிநொச்சியில் கரைச்சி, கண்டாவளை ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளில் 7401 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பரந்தன், உமையாள் புரம், குமரபுரம், கோரக்கன்கட்டு, ஊரியான் முரசுமோட்டை, கண்டாவள்ள, பெரியகுளம், புளியம்பொக்கணை, கல்மடு, தருமபுரம் கிழக்கு, தருமபுரம் மேற்கு, தட்டுவன்கொட்டி, புன்னைநீராவி, பிரமந்தனாறு ஆகிய கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 3668 குடும்பங்களைச் சேர்ந்த 14659 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 2709 வீடுகள் பகுதியாகச்சேதமடைந்து உள்ளன. வெள்ளத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் 05 நலன்புரி நிலையங்களில் 111 குடும்பங்களைச்சேர்ந்த 383 அங்கத்தவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை கிளிநொச்சியில் குளங்களின் நீர்மட்டங்கள் உயர்வடைந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

நேற்றைய தினம் குளங்களின் நீர்மட்ட அளவுகள் வருமாறு:-

| குளங்கள் | வான்பாயும் அளவு | நீர்கொள்ளளவு | தற்போதைய நீர்கொள்ளளவு |
|---|---|---|---|
| இரணைமடுகுளம் | --- | 34அடி | 31அடி 8அங் |
| அக்கராயன்குளம் | 5அங் | 23அடி | 23அடி 5அங் |
| புதுமுறிப்புகுளம் | 4அங் | 16அடி6அங் | 16அடி 10அங் |
| கரியாலை நாக படுவான் குளம் | 4அங் | 10அடி | 10அடி 4அங் |
| கனகாம்பிகைகுளம் | 3அங் | 10அடி | 10அடி 3அங் |
| வன்னேரிக்குளம் | 4அங் | 9அடி 6அங் | 9அடி 10அங் |

(69)

### குளத்திலிருந்து..

மீட்கப்பட்டிருக்கிறது. இச்சம் பவம் குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(72)

## இராணுவ வீரரைக் காணவில்லை

திருகோணமலை - ஹொரவப்பொத்தான வீதியூடாக செல்லும் யாங் ஓயா ஆற்றினைக் கடக்க முற்பட்ட இராணுவ வீரர்கள் மூவரில் ஒருவர் நீரில் மூழ்கியுள்ளதாக றொட்டவெல இராணுவ முகாமுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த இராணுவ வீரரைத் தேடும் முயற்சியில் படைத்தரப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

## கொழும்பு-அம்பாறைக்கு 'சி பிளேன்' சேவை ஆரம்பம்

அம்பாறை மாவட்டத்தில் சுற்றுலாத் துறையினை மேம்படுத் தும் நோக்கில் சி பிளேன் விமான சேவை நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து 6 அவுஸ்ரேலிய உல்லாசப் பிரயாணிகள் உட்பட 12பேருடன் புறப்பட்ட சி பிளேன் இலங்கையைச் சேர்ந்த 5 பேருடனும் அம்பாறையிலுள்ள கொண்டைவெட்டுவான் வாவியில் தரையிறங்கியது. இவ்விமானத்தில் ஒரே நேரத்தில் 17பேர் பயணிக்க முடியுமென விமானப்படை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

### பொதுநலவாய...

நகரங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர். இவர்களுக்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பொதுநலவாய நாடாளுமன்றக் குழுவின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### இனங்களுக்கிடையில்...

உரை நிகழ்த்திய டெரேசிட்டஷாபேர் தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற மகாநாட்டில் தொடர்ந்து பேசும் போது அமெரிக்கா தமிழீழத்தை ஆதரிக்கவில்லை. அதேநேரம் இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுக்களை ஒரு மூலையில் தூக்கிப் போட்டு விட முடியாது.

இலங்கை அரசுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் இடம்பெற்று முடிந்த யுத்தத்தின் இறுதி நாட்கள் மிகவும் பயங்கரமானவை என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

நீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது மஹிந்த அரசின் கடமை ஆகும்.

தேசிய நல்லிணக்க முயற்சிகளை வரவேற்கின்றோம். ஆனால் யுத்தக் குற்றங்கள் தொடர்பாகவும் உரிய கவனத்தை இலங்கை செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தந்திரோபாய மற்றும் சர்வதேச கற்கைகளுக்காக நிலையத்தின் தெற்காசிய நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளராகவும் விளங்கும் டெரேசிட்டா ஷாபேர் இலங்கை அரசாங்கத்தினால் உடனடியாக உண்மையான நல்லிணக்கம் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளதாகவும் கூறினார்.

நல்லிணக்க செயற்பாடுகளை நழுவவிட்டால், புதிய உள்நாட்டு மோதல் ஏற்படலாம். இலங்கைத் தலைவரை நல்லிணக்கத்திற்கு எவ்வாறு இசையச் செய்ய முடியும் என்பதில் தனக்கு தெளிவான அறிவு இல்லை எனவும் தெரிவித்தார்.

### நடமாடும்...

விக்கினேஸ் வராக் கல்லூரியில் இந்நடமாடும் நூலகசேவை நடை பெற்றுள்ளது.

சுமார் 2000 மாணவர்கள் படித்து பயன்பெறக் கூடிய அரிய நூல்கள் இந்நடமாடும் சேவையின் போது எடுத்து செல்லப்பட்டது. இவற்றில் சுமார் ஐம்பது நூல்கள் அப்பாடசாலை மாணவர்களுக்கு கைமாற்றாக வழங்கப்பட்டன.

இதேவேளை இந்நூலக சேவையானது யாழ். மாநகர எல்லைக்கு வெளியேயுள்ள பாடசாலைகளுக்கு கிழமைக்கு ஒரு பாடசாலை வீதம் நடாத்தப்படவுள்ளதாகவும் மேலும் இந் நூலக சேவை தேவைப்படும் பாடசாலைகள் தம்முடன் தொடர்புகொண்டு அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் யாழ். பிரதான நூலகர் மேலும் தெரிவித்தார். (பா,மி)

### அவசரகாலச்சட்டம்...

போது தீமானிக்கப்பட்டுள்ளதாக, ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலாக, ஏற்கனவே வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மாதம் ஒன்றுக்கு நீடிக்கப்பட்ட அவசர கால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதம் நேற்று நடைபெறவிருந்தது.

எனினும் இதற்கான வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்து, அடுத்த மாதம் பொருட்டு, அவசர கால சட்டத்தை ஒரு மாதத்துக்கு நீடிக்கும் விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நேற்றைய தினம் நடைபெற்றது.இதேவேளை தற்போது காணப்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பில் நேற்றைய தினம் இரண்டு மணித்தியாலத்துக்கு நாடாளுமன்றில் சிறப்பு விவாதம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஐ.நா.வின்...

தற்போது இரண்டாம் கட்டமாகவும் மழை வெள்ளத்தினால் பாதிப்படைந்துள்ள நிலையில், அவர்களுக்கான நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், ஏற்கனவே இலங்கைக்கு வழங்க கோரப்பட்டிருந்த 80 மில்லியன் டொலர்கள் நிவாரண நிதித் திரட்டலை, இந்த மாதம் 26ஆம் திகதி மீண்டும் விடுக்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத் தேவைக்காக 80 மில்லியன் டொலர்களை கோரியிருந்தது. இதற்கு ஐக்கிய நாடுகளின் தொண்டு நிறுவனங்களிடம் இருந்து சிறந்த அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது இலங்கை மக்கள் இரண்டாம் கட்டமாகவும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதால், அதற்கான நிதிக் கோரலை மீண்டும் விடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.முதலாவது முறையாக ஏற்பட்ட வெள்ள நிலையை விட, தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை பாரிய அனர்த்தத்தை ஏற்படுத்தியுள்ளதாக புஹுனே தெரிவித்துள்ளார்.

### கறைபடியாத...

எம்மீதான அவதூறுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பரப்புவதற்கு காரணம் அரசியல் காழ்ப்புணர்சிதான்.

மக்கள் மத்தியில் எமக்கிருக்கும் ஆதரவைக் கண்டு இவர்கள் பயப்படுகின்றார்கள். அந்த அரசியல் பயத்தின் காரணமாகவே இவர்கள் இவ்வாறு உண்மைகளை திரித்து கூறி வருகின்றனர்.

அதுவும் தேர்தல் காலம் என்பதால் இவர்கள் மக்கள் மத்தியில் செல்வதற்குப் பயப்படுகின்றார்கள்.

மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடியதாக எதை இவர்களால் கூற முடியும்? உரிமை உரிமை என்று வெறும் ஊடகங்களுக்காக மட்டும் கூச்சலிடும் இவர்கள் உரிமையைப் பெற்றுக்கொடுக்கவும் இல்லை. அதற்காக நடைமுறைச்சாத்தியமாக முயலவும் இல்லை. அவ்வாறு நடந்திருந்தால் அதைப் பற்றி மக்களிடம் இவர்களால் கூற முடியும். மக்களுக்குச் சேவை செய்திருந்ததால் அதைக் கூறியிருக்க முடியும். அல்லது மக்களின் துயரங்களை துடைத்திருந்தால் அதையாவது கூறியிருக்க முடியம்.

நாடாளுமன்றம் சென்று என்ன செய்தீர்கள் என்று கேட்டால் பாம்பு குட்டிக்கு பல்லு விளக்கினேன் சும்மாவா இருந்தேன் என்பார்கள். கோழி முட்டையில் மயிர் பிடுங்கினேன் சும்மாவா இருந்தேன் என்று கேட்பார்கள். மயிரால் கட்டி மலையை இழுத்தோம் என்பார்கள். ஆகவே இவர்கள் தங்களைப் பற்றி மக்களிடம் கூறுவதற்கு இவர்களிடம் எதுவும் இல்லை.


ஆகவேதான் அடுத்தவர்கள் மீது வசை பாடுவதை மட்டும் தமது தொழிலாக இவர்கள் கொண்டுள்ளனர்.

மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக பொய்களைச் சொல்லி மக்களைக் கடந்த காலங்களைப் போல் ஏமாற்ற நினைக்கின்றார்கள்.

சிலரை பல காலம் ஏமாற்ற முடியும். பலரை சில காலம் ஏமாற்ற முடியும். ஆனால் எல்லோரையும் எல்லாக்காலமும் ஏமாற்றிவிட முடியாது. எமது மக்களையும் தொடர்ந்தும் யாரும் ஏமாற்றி விட முடியாது.

இவ்வாறு பேசியிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் காசாப்புக்கடைக்காரன் ஜீவகாருண்யம் குறித்துப் பேசுவது போல், கொள்ளைக்காரர்களே கொள்ளைகளைப் பற்றி பேசுகிறார்கள். ஊடகதர்மத்தை கொன்றொழித்தவர்களே ஊடக தர்மம் குறித்தும் உபதேசம் செய்கிறார்கள்

என்று தொடர்ந்து பேசியிருந்ததோடு, உங்களது கரங்கள் கறைபடிந்தவைகள் இல்லை என்றால் அவைகளை உயர்த்துங்கள் பார்க்கலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை பார்த்து கேட்ட போது அனைவரும் சங் கடத்தில் ஆழ்ந்திருந்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பொன்சேகாவின் விடுதலைகோரி வெலிக்கடையில் சத்தியாக்கிரகம்

## நூற்றுக்கணக்கில் மக்கள் திரண்டனர்



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவருமான சரத் பொன்சேகா கைதுசெய்யப்பட்டு நேற்றுடன் ஒரு வருடமாகின்ற நிலையில், அவரை விடுதலை செய்யுமாறு கோரி வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை மாலை சத்தியாக்கிரக போராட்டமொன்று நடைபெற்றது.

மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்திருந்த இந்த சத்தியாக்கிரக போராட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த சத்தியாக்கிரக போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி கட்சி, இன, மத பேதமின்றி நாம் எல்லோரும் இங்கு கூடியுள்ளோம்.

சரத் பொன்சேகாவை மாத்திரம் தனியான ஒரு சிறைக்கைதியாகப் பார்க்கவில்லை. சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் ஒன்று சேர்த்து அவர்களையும் விடுதலை செய்வதற்காக இந்த சத்தியாக்கிரக போராட்டத்தில் ஒன்றுகூடியுள்ளோம். யுத்தம் நடந்ததற்கான காரணிகளை ஆராய்ந்து அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் தவறியுள்ளது.

நாட்டின் ஜனநாயகத்தன்மையை பெற்றுக்கொடுப்பதற்கும் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காகவும் ஜனநாயக மக்கள் முன்னணி இந்த சத்தியாக்கிரக போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளது என்றார்.

இந்த சத்தியாக்கிரக போராட்டத்தில் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், சுனில் ஹந்துன்நெத்தி, அர்ஜுன ரணதுங்க, டிரான் அலஸ், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன, ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்ட பலர் இந்த சத்தியாக்கிரக போராட்டத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

### உள்ளூராட்சி சபைத் தேர்தல்

## வேட்பு மனு நிராகரிப்பு; இதுவரை 41 மேன்முறையீடுகள்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கென அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் நிராகரிக்கப்பட்டவைக்கு எதிராக அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களால் இதுவரை 41 மேன்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இதில் 26 மேன்முறையீட்டு மனுக்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தாக்கல் செய்துள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம்ஜயந்தவினால் இந்த மேன்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி 4 மேன்முறையீடுகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 6 மேன்முறையீடுகளையும் தாக்கல் செய்துள்ளன.

# வடபகுதியில் நிலையான பாதுகாப்பு; உறுதிப்படுத்த படையினர் முயற்சி

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

வடபகுதியில் நிலையான பாதுகாப்பை உறுதிப்படுத்த படையினர் கடுமையாகச் செயற்பட்டு வருகின்றனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உபய மெதவல தெரிவித்தார்.

அத்துடன், வடபகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையானது ஒரு சாதாரண விடயமாகும் என வும், அதனை யாரும் தவறான நோக்கங்களுடன் பார்க்க வேண்டாம் எனவும், இந்தப் பதிவு தொடர்பில் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும்,

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு பயங்கரவாதத்திலிருந்து விடுபட்டு தற்போது முழு அளவில் சுதந்திரமடைந்துள்ளது. இதனை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள பாதுகாப்பு படையினர் நாடளாவிய ரீதியில் தொடர்ந்தும் பல செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அவ்வாறான செயற்திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். எனவே இவ்வாறான செயற்பாடுகளை யாரும் தவறான நோக்கங்களுடன் பார்க்கக் கூடாது. குறிப்பாக மக்களுக்கு இச்செயற்பாடுகளைப் பற்றி தவறாகக் கூறக்கூடாது.

பொது மக்கள் வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லை. அதேநேரம் கிராம சேவகர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஊடாகவே இப்பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இது ஒரு சாதாரண நடவடிக்கையே என பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இப்பதிவு நடவடிக்கையின் போது, ஒவ்வொரு குடும்பமும் சார்ந்த அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் படையினரால் துருவித்துருவி விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக குடும்பத்துடன் தங்கியிருக்காது தனித்திருக்கும் இளைஞர் யுவதிகளது புகைப் படங்கள் மற்றும் தற்போது அவர்கள் தங்கியிருக்கும் முகவரிகள் என்பனவும் சேகரிக்கப் பட்டு வருவதாகவும் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.


## மரண அறிவித்தல்

### திருமதி சவிரிமுத்து காணிக்கையம்மா (புனிதசீலி)

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், குருசோ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சவிரிமுத்து காணிக்கையம்மா (புனிதசீலி) 06.02.2011 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் சவிரிமுத்துவின் அன்பு மனைவியாரும், திருமதி ஜோ.புஸ்பசீலி (மரியாயின் சேனை கொமிசியத் தலைவி, யாழ்.) யோ.புஸ்பராஜன் (நோர்வே), யோ.புஸ்பசீலன் (நோர்வே), யோ.புஸ்பநந்தன் (சுவிஸ்), திருமதி யே.புஸ்பநந்தினி (பாபா பாம் கடை உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பே.ஜோர்ஜ் (அஞ்சலகம், யாழ்.) திருமதி பு.யூடிற்றா (நோர்வே), திருமதி பு.செலஸ்ரீனா (நோர்வே), திருமதி பு.சாமினி (சுவிஸ்), செ.யேசுநாயகம் (மாநகரசபை, யாழ்.) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

இவரது நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**167, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ். 021 300 7786** (C/104) **தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.**


# பல்தேசியக் கம்பனிகளுக்கு விலைபோகும் இலங்கையின் கரையோர நிலப்பரப்புக்கள்

(கொழும்பு)

சுற்றுலா மையங்களையும் நட்சத்திர விடுதிகளையும் அமைப்பதற்காக கிழக்கு மாகாணத்தில் பல்வேறு பிரசித்திபெற்ற நிலப்பரப்புக்கள் சர்வதேச நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்படவிருக்கிறது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் சுற்றுலாத்துறை அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திருகோணமலை - குச்சவெளியில் உள்ள சில காணிகளை நட்சத்திர விடுதிகள் கட்டுவதற்காக அரசாங்கம் விற்பனை செய்ய இருக்கின்றது. 500 ஏக்கர் காணி 90 மில்லியன் அமெரிக்க டொலருக்கு (10 பில்லியன் ரூபா) விற்பனை செய்யப்பட இருக்கின்றது.

இதேபோன்று புத்தளம் - கற்பிட்டியிலுள்ள காணிகளை விற்பனை செய்வதற்கும் அரசாங்கம் தனது சுற்றுலாத்துறை ஊடாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கற்பிட்டியில் ஏற்கனவே 10 செயற்கைத் தீவுகளைக் கட்டுவதற்கு வெளிநாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது.

இவ்வாறு காணிகளை விற்பனை செய்வது அல்லது குத்தகைக்கு விடுவதன் ஊடாக 500 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது.

கொழும்பு - காலிமுகத்திலுள்ள முப்படைத் தலைமையகத்தை அகற்றி அந்த இடத்தையும் ஹொங்கொங்கைத் தளமாகக்கொண்ட மற்றும் சீன அரச நிறுவனத்திற்கு விற்பனை செய்யவுள்ள இலங்கை அரசாங்கம் அதன் மூலம் 250 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைப் பெறவிருக்கின்றது.

குச்சவெளியில் 5 நட்சத்திர விடுதிகளைக் கட்டுவதற்கு 99 வருடங்கள் குத்தகைக்கு ஏக்கருக்கு தலா 20 மில்லியன் ரூபாவிற்கு 15 முதல் 20 முதலீட்டாளர்களுக்கு இந்தக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட இருப்பதை சுற்றுலாத்துறை தலைமை அதிகாரி நாலக்க கொடஹேவ உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

## தேர்தல் வன்முறை அதிகரிப்பு


(கொழும்பு)

தேர்தல் சட்ட திட்டங்களை மீறிய 25 முறைப்பாடுகள் இதுவரை கிடைக்க பெற்றுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. பவரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதில் ஐந்து தாக்குதல் சம்பவங்களும், வேட்பாளர்களை அச்சுறுத்திய 11 சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


DOT LINE®
DIGITAL COLOUR LAB

3R - 12 x 36



யாழ் நகரில் PHOTO துறையில்
மற்றுமோர் புதிய அறிமுகம்.
யாழ் நகரில் முதன் முதலில் உலகத் தரம்
வாய்ந்த FRONTIER -LP 7500 மொடல்
DIGITAL COLOUR PRINT மெசினை
கொண்டு யாழ் வாழ் STUDIO நண்பர்களையும்.
அன்பர்களையும், யாழ் வாழ் மக்களையும் PHOTO
துறையில் நவீன யுகத்தின் சிறப்புக்குள் அழைத்துச்
செல்ல இதோ அறிமுகமாக்கியுள்ளோம்
FRONTIER -LP 7500
உங்கள் அனைத்து வகையான PHOTO தெரிவுகளுக்கும்
யாழ் நகரில் திகழ்பவர்கள்.
DOT LINE DIGITAL COLOUR LAB நிறுவனத்தினர்.

198/6 நாவலர் வீதி யாழ்ப்பாணம்.
021 222 8443
dotlinejaffna@yahoo.com

(C/435)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.